Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 012 | செவ்வாய்க்கிழமை | கார்த்திகை 22ஆம் நாள் 08 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# ஒரு லட்சம் மக்கள் வடக்கில் பாதிப்பு!

## 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதம்

கொழும்பு, டிசெம்பர் 8

புரேவி புயல் தாக்கம் மற்றும் சீரற்ற காலநிலையால் வடக்கு மாகாணத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

19 >

## ஐந்து புயல்கள்: வெறும் வதந்தியே

சென்னை, டிசெ.8

இலங்கை மற்றும் தமிழ்நாட்டுக் கரையோரங்களுக்கு அண்மையாக எதிர்வரும் நாள்களில் 5 புயல்கள் வெளியாகும் என்று இந்திய ஊடகங்களை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளி

19 >

## கொரோனா காவு 142

கொழும்பு, டிசெ.8

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்தார். அதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 142

19 >

## கொரோனா விசாரணை செய்தோருக்கு தொற்று!

கொழும்பு, டிசெ.8

மினுவாங்கொட கொரோனா வைரஸ் கொத்தணியின் ஆரம்ப மூலத்தைக் கண்டறிவதற்கான விசாரணைகளை முன்னெடுத்த புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 90 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு

19 >



## சாவகச்சேரி கொள்ளைகள்: இருவர் நேற்றுச் சிக்கினர்!

யாழ்ப்பாணம், டிசெ.8

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வயல், மட்டுவில் பகுதிகளில் கடந்த 2ஆம் திகதி இரவு நடந்த கொள்ளைகளுடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரி

19 >

## அரசுக்கு எதிராக போராட்டம்

கொழும்பு, டிசெ.8

அரச பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கியுள்ளது எனச் சுட்டிக்காட்டி,

20 >

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி பாடசாலைகளும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் இன்றுமுதல் இயங்க ஆரம்பிக்கும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் தெரிவித்தார். கல்வி அமைச்சு மற்றும்

20 >

## புலிகள் மீதான தடையை நீக்க வழக்காடவும் உரிமை உண்டு!

நாடாளுமன்றில் மனோ எம்.பி. பொன்சேகாவுக்குச் சூடு

19 >

## இத்தாவில் விபத்தில் முதியவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, டிசெ.8

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இத்தாவிலில் நடந்த விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று இரவு 7.30 மணியளவில் நடந்துள்ளது.

19 >

## கிளி. மருத்துவமனையில் சடலங்கள் மாறாட்டம்!

கிளிநொச்சி, டிசெ.8

கிளிநொச்சியில் நேற்று இரண்டு இறப்புக்கள் இடம்பெற்றிருந்த நிலையில், விசாரணைகளின் பின்னர் சடலங்கள் இடம் மாறி அனுப்பப்பட்டதால் பெரும் குழப்ப நிலைமை தோன்றியது. கிளிநொச்சி திருவையாறைச் சேர்ந்த கோவிந்தன் மோகனதாஸ் (வயது-55) மற்றும் கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்தைச் சேர்ந்த கந்தையா

20 >

## மார்ச் முதலாம் திகதி சா/த பரீட்சை ஆரம்பம்

கொழும்பு, டிசெ.8

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடத்த கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கல்விஅமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இதைத் தெரிவித்தார். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை

19 >

## வலி. கிழக்கு தவிசாளரை கைதுசெய்ய தீவிர முயற்சி

### முன்பிணை கோரி மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம், டிசெ.8

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷை கைது செய்ய அச்சுவேலிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதையடுத்து

20 >

## சத்தியமூர்த்தியின் செயற்பாட்டால் தெல்லி.மருத்துவர்கள் இன்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ்.தெல்லிப்பழை மருத்துவமனையின் மருத்துவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை

20 >

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

# அரசின் ஒரு வருடத்திலேயே மோசமான வன அழிப்புகள்!

## ஜே.வி.பி.யின் அநுரகுமார சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ. 8**

**வளங்களையும், வனங்களையும் பாதுகாப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் தமது ஓர் ஆண்டுகால ஆட்சியிலேயே மிக மோசமான வன அழிப்புகளில் ஈடுபட்டுள்ளனர். வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகள் மற்றும் வறட்சி போன்ற இயற்கை இடர்களால் கடந்த பத்து ஆண்டுகளில் ஒன்றரைக் கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக தெரிவித்தார்.**

சபையில், வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் அமைச்சுக்கள் மற்றும் வன வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றிய போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

2010 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரையில் வெள்ளப்பெருக்கு காரணமாக 73 இலட்சத்து 97 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இந்த இடர்களில் 734 பேர் உயிரிழந்துள்ளனர்.

வறட்சி காரணமாக 75 இலட்சத்து 40 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். யானை மனித முரண்பாடுகள் காரணமாகவும் பல உயிர்கள் பலியாகியுள்ளன. எனவே இயற்கை தன்மைகளை சற்றும் பொருட்படுத்தாது அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன. வெறுமனே பணத்தை இலக்கு வைத்த சமூகமொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு பணம் மட்டுமே கண்ணுக்கு தெரிகின்றது.

நாம் அன்றாடம் எமது வாழ்வுக்காகப் பயன்படுத்தும் அனைத்துமே மத்திய மலைநாட்டில் இருந்தே வருகின்றது. ஆனால் மத்திய மலைநாட்டின் இயற்கையைப் பாதுகாக்க எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை. எமது நாட்டின் சுவாசம் மலையகமாகும். இதுவரை எம்மை ஆண்டவர் தொடக்கம் எமது மூதாதையர்கள் எவருமே மலையகத்தை நாசமாக்காது பாதுகாத்தனர்.

பூமியின் ஐந்தில் ஒரு பங்கு எமது மலையகத்தின் இயற்கை வளங்களில் தங்கியுள்ளது. ஆனால் கடந்த சில காலமாகவே தவறான அபிவிருத்திகளை கருத்தில் கொண்டு மலையகம் அழிக்கப்பட்டு வருகின்றது. எமது நாட்டின் வளங்கள் இங்கு வாழும் மக்களுக்கு தாராளமாக போதுமானதாகும்.

ஒரு சில நப்பாசை பிடித்த அதிகார மிருகங்கள் இங்குள்ள வளங்களை நாசமாக்கி விற்று அழித்து வருகின்றன. எனவே இப்போது எமது கொள்கையை மாற்றியாக வேண்டும். என்றார். (த-இ22)

# மக்களின் தேவையறிந்து பணியாற்றுதல் வேண்டும்

## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

ஒரு லட்சம் வேலைவாய்ப்புக்குள் இணைக்கப்பட்டுள்ள பயிலுநர்கள் மக்களின் தேவையறிந்து கடமையாற்ற வேண்டும் என யாழ் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் நாடளாவிய ரீதியான ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 104 பயிலுநர்களுக்கான தொழில் பயிற்சி தொடர்பான ஆரம்ப நிகழ்வு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: வறுமை நிலையை அடிப்படையாகக் கொண்டு குறிப்பாக கல்வியைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் இருக்கின்ற ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்களை அவர்களுடைய வாழ்வாதாரதை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டே இந்த ஒரு லட்சம் குடும்பங்களில் இருந்து முதல் கட்டமாக நாடு பூராகவும் 35 ஆயிரம் பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களில் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களில் 104 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

.பயிலுநர்களைதொழில் ரீதியாக வலுப்படுத்தி அவர்களுடைய திறமைகளை மேலும் மேம்படுத்திதொழில்வாண்மை உள்ளவர்களாக மேம்படுத்திவளப்படுத்தி தெரிவு செய்த தொழிலை திறம்பட செய்வதற்கும்அந்த தொழிலை நேர்த்தியாக செய்வதற்கும் இந்த பயிற்சிகள் நிச்சயம் கைகொடுக்கும் என்றார். (ம111)

# சிறைக் கலவர பின்னணியில் அரசின் சதித்திட்டம் உள்ளது?

## எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 8

மஹர சிறைச்சாலைக் கலவரம் இடம்பெற்று ஒருவாரம் கடந்தும் உயிரிழந்த 11 பேரில் 4 பேர் மாத்திரமே இனம் காணப்பட்டிருக்கின்றனர். அதனால் இந்த சம்பவத்தின் பின்னால் பெரும் சதித்திட்டம் இருக்க வேண்டும். இறந்தவர்களின் சடலங்களை உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தாமல் எரித்துவிடவே அரசு முயற்சிக்கின்றது என எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுற்றாடல், வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நாடாளுமன்றில் நேற்று நடைபெற்றது. அதில் மேலும் தெரிவித்ததாவது:

மஹர சிறைச்சாலை இறப்புக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க பொலிஸாருக்கு 24 மணி நேரம் போதும். அதனால் இந்த விடயத்துக்கு பின்னால் பெரும் சதித்திட்டம் இருக்கும் என்ற சந்தேகம் எமக்கு இருக்கின்றது.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளின் உறவினர்கள், அவர்களின் பிள்ளைகள், உயிரிழந்தவர்களின் முறையான தகவல் இன்னும் தெரியாமல் சிறைச்சாலைக்கு முன்னால் அழுதுகொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு உண்மையான் தகவல்களை தெரிவிக்க முடியாத நிலையில் அரசு இருக்கின்றது. அரசின் இயலாமையை இதிலிருந்து விளங்கிக்கொள்ளலாம்.

அதேபோன்று அரசின் சதித்திட்டங்கள் மற்றும் கொலைக் கலாசாரம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதற்கு மஹர சிறைச்சாலை கலவரம் சிறந்த சாட்சியமாகவுள்ளது.

அதனால் எமது நாடு மீண்டும் கடந்த கால கொலைகார கலாசாரத்துக்கா செல்கின்றது என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது. சர்வதேச நாடுகளும் மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் அவதானம் செலுத்தியிருக்கின்றன.

சிறையில் இருக்கும் கைதிகளைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது. அந்தப் பொறுப்பிலிருந்து அரசு விலகியிருக்கின்றது. என்றார். (த-44)

# தேசியத்தை வளர்க்கும் நாடாக இலங்கையை மாற்றுவோம்

## அமைச்சர அமரவீர சபையில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 8

தேசிய ஆடை அணிந்து, தேசிய உணவுகளை உட்கொண்டு தேசியத்தை வழக்கும் நாடாக இலங்கையை மாற்றுவதும், சூழலுக்கு ஏற்புடையதல்ல என கருதும் காடுகளை அழித்துவிட்டு சூழலுக்கு ஏற்ற காடுகளை வளர்க்கவும் அரசு உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என அமைச்சர் மஹிந்த அமரவீர சபையில் தெரிவித்தார்.

சுற்றாடல், வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் அமைச்சுக்கள் மற்றும் வன வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் வளங்களைப் பாதுகாத்து தேசிய உணவுத் தேவையை நாமே பூர்த்தி செய்துகொள்ளவே நினைகின்றோம். அதற்காக காடுகளை அழித்து, வளங்களை நாசமாக்கி தேசிய உற்பத்தியை உருவாக்க நினைக்கவில்லை. எமது உற்பத்தி வளங்களை வைத்துக்கொண்டே நாம் எமது தேசிய உற்பத்தியை உருவாக்கவுள்ளோம். தேசிய உற்பத்தி குறித்து இன்று எமது உற்பத்தியாளர்களுக்கு பெரியளவில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

950 மில்லியன் 'சொப்பின்' பைகளை வருடாந்தம் பயன்படுத்துகின்றோம். ஒரு நாளைக்கு 10 மில்லியன் உணவுகளை சுற்றும் 'லஞ்ச்சீற்' பயன்படுத்துகின்றோம். பிளாஸ்டிக் பயன்பாடுகள், இலத்திரனியல் கழிவுகள் என எமது சூழல் நாளுக்கு நாள் நாசமாக்கிக்கொண்டுள்ளது. இவை அனைத்தையும் நிறுத்தி மாற்றீடாக சூழலுக்கு ஏற்ற நடவடிக்கைகளை பயன்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். என்றார். (தஇ-22)

# டிசம்பர் 21 வரையில் பிரசாந்தனின் மறியல்

கொழும்பு, டிசெ. 8

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தனின் விளக்கமறியல் டிசம்பர் 21ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு மட்டக்களப்பு நீதி வான் நீதிமன்றத்தில், நீதிவான் ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் காணொளி ஊடாக நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பிரசாந்தன், கடந்த மாதம் 9ஆம் திகதி குற்றப் புலனாய்வுத்துறையினரால் கைதுசெய்யப்பட்டார்.

2008ஆம் ஆண்டு ஆரையம்பதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டிருந்த அவர், பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்திய குற்றச்சாட்டின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய, பிரசாந்தன் மீண்டும் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம22)

### எகிறும் தொற்றாளர்கள் எண்ணிக்கை

# மருத்துவக் கட்டமைப்பு முடங்கும் அபாயநிலை




**கொழும்பு, டிசெ. 8**
**'கொரோனா வைரஸ் தாக்கத்தால் இலங்கையில் 6 மணிநேரத்துக்கு ஒருவர் உயிரிழக்கின்றார். நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. எனவே, வைரஸைக் கட்டுப்படுத்தாவிடின் நாட்டின் மருத்துவமனைக் கட்டமைப்பும் முடங்கக்கூடிய அபாயம் இருக்கின்றது' என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் நேற்று கருத்து வெளியிட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதம செயலாளர், மருத்துவர் ஹரித அளுத்கே மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனா வைரஸ் தாக்கத்தால் குளிர் காலமான டிசம்பர் மாதம் அவதானம்மிக்க காலப்பகுதி என உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் குளிர்காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. அமெரிக்காவில் 5 நாள்களில் 10 லட்சம் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆயிரமாக இருந்த மரண எண்ணிக்கை 2 ஆயிரம் என்ற கட்டத்துக்கு சென்றுள்ளது. மருத்துவர்கள்கூட மக்களின் மரணங்களைக்கண்டு கதறி அழும் காட்சிகளையும் கண்டோம்.

இலங்கையும் இன்னும் எச்சரிக்கையான அவதானம்மிக்க கட்டத்திலேயே இருக்கின்றது. ஆனாலும் நிலைமையைக் கட்டுப்படுத்தக்கூடிய சாத்தியமும் இருக்கின்றது. அதற்கு பொதுமக்கள் தரப்பில் இருந்து முழுமையான ஒத்துழைப்பு அவசியமாகும்.

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் ஒக்ரோபர் ஆரம்பம்வரையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13ஆகவே காணப்பட்டது. தற்போது அந்த எண்ணிக்கை 140ஆக அதிகரித்துள்ளது. நவம்பரில் மட்டும் 100 பேர்வரை உயிரிழந்துள்ளனர். அதாவது 6 மணிநேரத்துக்கு ஒருவர் மரணிக்கின்றனர். சில நாள்களில் 3 மணிநேரத்துக்கு ஒரு மரணம்கூட நிகழ்கின்றது. நாளொன்றுக்கான தொற்றாளர்களின் எண்ணிக்கையும் 200 என்ற கட்டத்திலிருந்து 600ஆக அதிகரித்துள்ளது.

நாளொன்றில் குணமடைபவர்களின் எண்ணிக்கை 300-400ஆக இருக்கின்றபோது தொற்றாளர்களின் எண்ணிக்கை 700-800 என்ற கட்டத்துக்கு சென்றால் நிலைமையை சமாளிக்கமுடியாது என்றார். (ம-44)

## பிரிட்டன் நாடாளுமன்றில் கார்த்திகைப் பூ எதற்கு?


*அதிருப்தி தெரிவிக்க அரசு முடிவு*

கொழும்பு, டிசெ. 8
பிரிட்டன் நாடாளுமன்ற கட்டடத்தில் தமிழீழத்தின் தேசிய அடையாளமாக கருதப்படும் கார்த்திகைப் பூ ஒளிரவிடப்பட்டமை குறித்து அரசு தனது அதிருப்தியைத் தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகமெங்கும் பரந்து வாழ்கின்ற தமிழர்கள் நவம்பர் 27ஆம் திகதியன்று மாவீரர்களை நினைவுகூர்வது வழமையாகும்.

குறித்த நாளில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கார்த்திகை பூ, பிரித்தானிய நாடாளுமன்றக் கட்டடத்தில் ஒளிரவிடப்பட்டது.

இந்தநிலையில் அயலுறவுத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்தன பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டனை இன்று சந்தித்து குறித்த விடயம் தொடர்பாக பேசுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-44)



## சிறைக்கலவரத்தின் பின்னணியில் கைதி

கொழும்பு, டிசெ. 8
மஹர சிறைச்சாலையில், அண்மையில் ஏற்பட்ட கலவரத்தின் பின்னணியில், கைதியொருவர் உள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளில் இது தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள சுமார் 120 க்கும் அதிகமான வாக்குமூலங்களை மையப்படுத்தி இந்த விசாரணைகளைத் தொடரும் சி.ஐ.டி. மேலதிக விசாரணைகளுக்காக விஷேட நிபுணர்கள் மற்றும் சுயாதீன சாட்சியாளர்களின் சாட்சியங்களையும் பதிவு செய்ய ஆரம்பித்துள்ளது.

அதன்படி இந்த விசாரணைகளுக்காக 8 உத்தியோகத்தர்கள் மேலதிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ம-22)

## உக்ரைன் ஊழியரால் மினுவாங்கொட அலை

யாழ்ப்பாணம், டிசெ. 8
மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் ஊழியர்களுக்கு ஏற்பட்ட கொரோனா வைரஸ் தொற்று உக்ரைனில் இருந்து வருகைதந்த விமான ஊழியரால்தான் ஏற்பட்டது என்று நம்பப்படுகிறது என நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர், மருத்துவர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இதனைக் கூறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க, எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (ம-22)



## எட்டாயிரம் கைதிகள் இந்தமாதம் விடுவிப்பு

கொழும்பு, டிசெ. 7
கொரோனா பிரச்சினையைத் தொடர்ந்து சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை கருத்திற் கொண்டு 8 ஆயிரம் சிறைக் கைதிகள் இந்த மாதம் விடுவிக்கப்படவுள்ளனர்.

சிறைக் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகிறது என சிறைச்சாலை அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

சிறிய தவறுகள் தொடர்பிலும் அபராதம் செலுத்த முடியாத கைதிகளும் இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளனர். (ம-22)

## நவம்பரில் மட்டும் 100 பேர் இறப்பு!

*3ஆவது அலையால் 24,318 பேருக்கு கொரோனா*

கொழும்பு, டிசெ. 8
இலங்கையில் கொரோனா வைரஸ் 3ஆவது அலைமூலம் நேற்று முன் தினம் இரவுவரை 24 ஆயிரத்து 318 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

இவர்களில் இதுவரையில் 127 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த மாதம் மட்டும் 100 பேர் உயிரிழந்துள்ளனர்.

மினுவாங்கொட கொத்தணிமூலம் 3 ஆயிரத்து 59 பேருக்கும், பேலியகொட கொத்தணிமூலம் 21 ஆயிரத்து 259 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது. இவர்களில் 17 ஆயிரத்து 52 பேர்வரை குணமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் மாத்திரம் 649 பேருக்கு வைரஸ் தொற்றியது.

அதேவேளை, இலங்கையில் நேற்றுவரை மொத்தமாக 27 ஆயிரத்து 876 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

இவர்களில் 20 ஆயிரத்து 459 பேர் குணமடைந்துள்ளனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் நேற்று முன்தினமும் மூவர் உயிரிழந்தனர்.

இதன்படி இலங்கையில் கொரோனா தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 140ஆக (மார்ச்சில் இருந்து) அதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். (ம-44)

# உடல் தகனம் செய்யும் முடிவு அரசாங்கத்தினுடையது அல்ல

*அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.8

**கொரனோவால் மரணிப்பவர்களை தகனம் செய்வது என்பது அரசாங்கத்தின் தீர்மானம் அல்ல. தொழில் நுட்பக் குழுவின் தீர்மானத்தை மீறி அரசாங்கத்துக்குச் செயற்பட முடியாது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் எச்.எம்.ஏ. ஹலீமின் கருத்துக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனாவால் மரணிப்பவர்களின் இறுதிக்கடமை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு சுகாதார அமைச்சால் நியமிக்கப் பட்டுள்ள தொழில்நுட்பக் குழுவுக்கே வழங்கப்பட்டுள்ளது.. இதில் எடுக்கப்படும் தீர்மானத்துக்கும் அரசாங்கத்துக்கும் அமைச்சரவைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இதில் அரசாங்கம் தலையிடுவதில்லை. குறித்த தொழில்நுட்பக் குழு எடுக்கும் தீர்மானத்தையே அரசாங்கம் பின்பற்றுகின்றது. அதனை மீறி அரசாங்கத்தால் தீர்மானிக்க முடியாது - என்றார். (ப)

கிராம அலுவலர் சாவு:

# சந்தேகநபருக்கு மறியல் நீடிப்பு

மன்னார்,டிசெ.8
மாந்தை மேற்கு கிராம அலுவலரது சாவுடன் தொடர்புடையவர் என கைதுசெய்யப்பட்ட, சந்தேகநபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் எம்.கணேசராஜா நேற்று உத்தரவிட்டார். .
இது தொடர்பான வழக்கு விசாரணை, மன்னார் நீதி மன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. கடந்த தவணையின் போது, வழக்கு விசாரணையை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பாரமெடுத்தனர்.
அதனால் வழக்கு விசாரணை பொலிஸாரிடம் இருந்து சி.ஐ.டிக்கு மாற்றப்பட்டுள்ளது.
இந்த நிலையில் மன்றில் நேற்று முன்னிலையான குற்றப்புலனாய்வுப் பிரிவினர், பல்வேறு தரப்பினரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் சுருக்க குறிப்பையும், மூன்று சான்றுப் பொருள்களையும் மன்றில் பாராப்படுத்தினர்.
தாம் தொடர்ந்தும் தமது விசாரணைகளை முன்னெடுத்து வருகிறோம் எனவும், அதற்கு தமக்கு போதிய அளவு கால அவகாசம் தேவை எனவும் மன்றில் தெரிவித்தனர். இந்த நிலையில் சந்தேக நபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டார். (க-56)

கிளிநொச்சியில்

# கொரோனாத் தொற்றாளர் மூவர் நலம்பெற்றனர்

கிளிநொச்சி, டிசெ. 8
கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 17 தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்களில் மூவர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:
கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று (நேற்று முன்தினம்) புதிதாக ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவருடன் மாவட்டத்தில் இதுவரை 17 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் மூவர் ஏற்கனவே குணமடைந்து வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
நேற்று (நேற்று முன்தினம்)கண்டறியப்பட்டவர் ஏற்கனவே தொற்று அடையாளம் காணப் பட்டவருடன் தொடர்புபட்டவர். அந்த வகையில் அவருடன் தொடர்புபட்டவர்களை அடையாளம் காணும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ம-6)

# ஜனாதிபதி செயலகம் முன்பாக வர்த்தகர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ. 8
கொழும்பு - புறக்கோட்டை மெனிங் சந்தையிலுள்ள வர்த்தகர்கள் சிலர், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பேலியகொட புதிய சந்தைக்கட்டடத் தொகுதியில் தமக்கு வர்த்தக நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட இடவசதி போதுமானதாக இல்லை என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.
இந்த விடயம் தொடர்பில், பல்வேறு சந்தர்ப்பங்களில் அதிகாரிகளுக்கு எடுத்துரைத்த போதிலும், இதுவரை எந்தவொரு பதிலும் தமக்கு கிடைக்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர். (ம-இ)





# முகக்கவசம் அணியாத 9 பேருக்கு ரூ.27,000 தண்டம்

காலி.டிசெ.8
முகக்கவசம் அணியாமல் தனிமைப்படுத்தல் சட்டத்தை உதாசீனம் செய்த 9 பேருக்கு, தலா 3ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
காலி - அபராதுவ பிரதேசத்தில் குறித்த சந்தேக நபர்கள் 9 பேரும் பொலிஸாரால் அண்மையில் கைதுசெய்யப்பட்டனர். நேற்று திங்கட்கிழமை காலி பிரதான நீதிமன்ற நீதிவான் ஹர்ச கெக்குனுவல முன்பாக சந்தேகநபர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன் போது 9 பேருக்கும் தலா 3ஆயிரம் ரூபா வீதம் 27ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டது. (ஐ-இ)

# தீயில் எரிந்து பெண் காயம்!

வவுனியா, டிசெ. 8
வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேமமடு பகுதியில் தீயில் எரிந்து படுகாயமடைந்த பெண் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
குறித்த பெண் தீயில் எரிவதை அவதானித்த அயலவர்கள் அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். ரஞ்சனி (வயது -41) என்ற பெண்ணே படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-110)

லொக்டவுணுக்குப் பின்னர்

# மெல்பேர்னில் தரையிறங்கிய முதல் விமானம் இலங்கையினதே!

கொழும்பு, டிசெ.8
கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் மெல்பேர்னில் தரையிறங்கிய முதல் சர்வதேச விமானம் என்ற பெருமையை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யுஎல்-604 என்ற விமானம் பெற்றுள்ளது.
அதன்படி இந்த விமானமானது நேற்றுமுன்தினம் மாலை 4.45 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு, நேற்றுக் காலை 7.53 மணியளவில் மெல்போர்னின் துல்லாமரைன் விமான நிலையத்தைச் சென்றடைந்துள்ளது.
மெல்பேர்னில் தொடர்ச்சியாக 38 நாள்களில் எதுவித கொரோனா நோயாளர்களும் பதிவாகாத நிலையில் எட்டு சர்வதேச விமானங்களினூடாக 258 பயணிகளை முதற்கட்டமாக கொண்டு வருவதற்கு மெல்போர்ன் நடவடிக்கை எடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஏனிந்த முட்டலும் மோதலும்?

தங்களுடைய தேவைகளை உணர்ந்து வேறுபாடுகளைக் களைந்து சேவையாற்றுவார்கள் என்னும் எதிர்பார்ப்புடனே மக்கள் தங்கள் பிரதிநிதிகளை வாக்கிட்டுத் தெரிவு செய்கின்றனர். மக்களின் வாக்குகளால் பதவிகளைப் பெற்றவர்கள் அதை உணர்ந்து செயற்படுகின்றார்களா என்பது பெரும் கேள்விக்குறியே.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் அனுமதி பெறாது அமைக்கப்பட்ட காட்சிப் பாதாகை ஒன்றை அகற்றியமைக்காக கைது நிலைமையை எதிர்நோக்கியிருக்கின்றார். வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வீதி ஒன்றை மத்தி அனுமதிபெறாது வீதி அபிவிருத்தி அதிகார சபை, திருத்த முயன்றதுடன் அதற்கான காட்சிப் பதாகையையும் அனுமதி பெறாது நிறுவியிருந்தது என்பது பிரதேச சபையினரின் குற்றச்சாட்டு.

1987ஆம் ஆண்டு பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 156ஆவது பிரிவுக்கு அமைய பிரதேச சபைக்குச் சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து எவரேனும் எந்த நடவடிக்கையை மேற்கொண்டாலும், அதை அகற்றும் அதிகாரம் பிரதேச சபைக்கு இருக்கின்றது.

பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட வீதியொன்றைத் திருத்தம் செய்வதானால், முதலில் பிரதேச சபையிடம் வீதி அதிகார சபை அனுமதி கேட்டுக் கடிதம் அனுப்பியிருக்க வேண்டும். அதற்குப் பிரதேச சபை சம்மதித்தால், திருத்தப் பணிகள் நடைபெறும் காலத்துக்கு அந்த வீதியை, வீதி அதிகார சபையிடம் கையளிப்பதற்கான கடிதத்தைப் பிரதேச சபை வழங்கும். வீதியைத் திருத்துவதற்கு குறிப்பிட்ட காலம் வீதியைப் பொறுப்பெடுக்கும் கடிதத்தை வீதி அதிகார சபை வழங்க வேண்டும். திருத்தக் காலம் முடிவடைந்த பின்னர் வீதியை மீண்டும் பிரதேச சபையிடம் கையளிக்க வேண்டும்.

தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் வீதி திருத்த விவகாரத்தில் இந்தப் படிநிலைகள் எவையுமே கடைப்பிடிக்கப்படவில்லை என்பதுதான் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் வைத்துள்ள குற்றச்சாட்டு. அதன் அடிப்படையிலேயே வீதி திருத்தம் தொடர்பான காட்சிப் பதாகையும் அகற்றப்பட்டிருந்தது. இந்தக் குற்றச்சாட்டு நியாயமானதே.

அந்தப் பாதாகையை அகற்றியமைக்காக தவிசாரளரைக் கைது செய்வதற்கு வரிந்துகட்டிக்கொண்டு நிற்கின்றனர். அவரைத்தேடி அலுவலகம், வீடு எனப் பல இடங்களுக்கும் சென்றிருக்கின்றார்கள். இந்த விவகாரத்தில் பொலிஸார் காட்டும் வேகம் மத்தியின் செல்வாக்கு இதில் அதிகம் இருக்கின்றதோ என்ற சந்தேகத்தை எழுப்புகின்றது.

வீதி திருத்தும் நடவடிக்கை மக்களுக்கானது என்பது உண்மை. அது உரிய வகையில் உரிய நடைமுறையில் மேற்கொள்ள வேண்டும். அதிகாரப் போக்குடன் மேலான்மைப் போக்குடன் மத்தி நடந்து கொள்வதும் அதற்கு தமிழ் அரசியல்வாதிகள் ஒத்தோடுவதுமே இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணம். உள்ளூராட்சி சபைகளில் இருப்பவர்களும் மக்கள் பிரநிதிகளே. அவர்களுக்குரிய அதிகாரங்கள் மதிக்கப்பட வேண்டும், பேணப்பட வேண்டும்.

வடக்கு மாகாண சபையின் காலத்தின்போதும், மத்தி இவ்வாறான போக்குகளைக் கடைப்பிடித்தது என்பது வெள்ளிடை மலை. வடக்கு மாகாண சபை திறம்பட இயங்காமல் போனதுக்கு இதுவும் ஒரு காரணம். அதிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு மக்கள் அபிவிருத்திகளின்போது மக்கள் பிரதிநிதிகள் ஒன்றுபட்டு உழைப்பதே தமிழ் சமூகத்துக்கு நன்மை பயக்கும்.

வடக்கு மக்கள் பிரதிநிதிகளிடம் இவ்வாறான பிளவுகள் ஏற்பட வேண்டும் என்பதில் மத்தி எடுக்கும் முயற்சியின் அங்கமே இவ்வாறான செயல்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும் மக்களின் பிரச்சினைகளுக்காக, அபிவிருத்திக்காக ஒன்றுபட வேண்டியது காலத்தின் தேவை. மத்தியின் தாளத்துக்கு ஆடாது, வடக்கு மக்கள் பிரதிநிதிகள் இணைந்து செயற்பட மக்கள் பிரதிநிதிகள் முன்வர வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

# கிளி. கௌதாரிமுனையில் மின் உற்பத்தி நிலையம்

## துமிந்த தலைமையில் கலந்தாய்வு

**கிளிநொச்சி, டிசெ.8**

**கிளிநொச்சி – பூநகரி கௌதாரிமுனை பகுதியில் சூரியமின் உற்பத்தி நிலையம் அமைப்பது தொடர்பான திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.**

சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க நேற்று கிளிநொச்சிக்கு வந்த போது இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது

கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இராஜாங்க அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது. இதில் செயலாளர், மாவட்டச் செயலர், பூநகரி பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-6)

## வீட்டில் இறந்தவருக்கு கொரோனாத் தொற்று

### கட்டியணைத்து அழுதவர்களுக்கும் தொற்று

கொழும்பு, டிசெ.8



வீட்டில் உயிரிழந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. கொலன்னனாவ, சிங்கபுர பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய குறித்த நபர் உயிரிழந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவரது சடலத்தை கட்டியணைத்து அழுத்த இருவரும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அவர்களுடன் மரண வீட்டுக்குச் சென்ற மேலும் மூன்று பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. (ப)

## வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

எம்பிலிபிட்டி - இரத்தினபுரி 100 ஆவது மைல்கல் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது என பொலிஸார் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிள் ஒன்று பாரவூர்தியுடன் மோதுண்டு விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 18 வயதுடைய இளைஞர்கள் இருவரே உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)

## சுற்றுலா பயணிகளை வரவழைக்க திட்டம்

கொழும்பு.டிசெ.8

சுகாதார விதிமுறைகளுக்கமைவாக, எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வர எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதி முதல் கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை வெளிநாடுகளிலிருந்து இலங்கையர்கள் 45 ஆயிரத்து 509 பேர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர். மேலும் 58 ஆயிரத்து 892 பேர் நாட்டுக்கு வருவதற்கான எதிர்பார்ப்புடன் வெளிநாட்டுத் தூதரகங்களில் பதிவு செய்துள்ளனர். நாட்டுக்கு அழைத்து வரப்பட்டவர்களில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வெளிநாடுகளில் தொழில் புரிந்த இலங்கைத் தொழிலாளர்கள் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

(க-இ)

# வடிகால்களை அடைத்ததாலேயே 300 வீட்டுத் திட்டத்தில் வெள்ளம்

## பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டு

சாவகச்சேரி, டிசெ.8

நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள வடிகால்கள் ஒரு சிலரால் மூடப்பட்டுள்ளதால், அங்குள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இதனால், சிறு குழந்தைகள் மற்றும் முதியவர்களுடன் உள்ள குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

300 வீடமைப்புத் திட்ட வரைபடத்தில் காணப்படும் மழை நீர் வழிந்தோட அமைக்கப்பட்ட வடிகால்களை அங்குள்ள சிலர் மூடி பாதையாக பயன்படுத்துவதாலும், சில வடிகால்கள் சேதமடைந்து காணப்படுவதாலும் சிலர் வடிகாலை தமது காணியுடன் அடைத்து வைத்திருப்பதாலும் வெள்ளநீர் வழிந்தோட முடியாமல் தேங்கிக் காணப்படுகிறது. இது தொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலகம் மற்றும் யாழ்.மாவட்டச் செயலகம் போன்றவற்றுக்கு முறையிட்டால் அங்கிருந்து வரும் அதிகாரிகள் நாவற்குழி தொடரூந்து நிலைய மேடையில் நின்று பார்த்து விட்டுச் செல்கின்றனர். மாவட்ட அரசியல்வாதிகள் பலருக்கு முறையிட்டும் இதுவரை எவரும் வந்து பார்வையிடவில்லை. இதனால் பிரதமருக்கு முறைப்பாடு அனுப்பியுள்ளோம் - என்றனர். (ப-9)

# உள்நாட்டு சுற்றுலாத்துறை; உதவித் திட்டங்கள் ஆரம்பம்

**கொழும்பு, டிசெ.8**

**உள்நாட்டு சுற்றுலாத்துறை சார்ந்தோருக்கு உதவி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பமாகியுள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது. இந்தத் துறையில் கொவிட்- 19 நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாரச்சி மேலும் தெரிவித்ததாவது:

சுற்றுலாத் திட்டத்துக்கு 30 கோடி ரூபா வரையான தொகை செலவிடப்படும். அதிகாரசபையில் தம்மைப் பதிவு செய்து கொண்ட சுற்றுலா வழிகாட்டிகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வழங்கப்படும். சாரதிகளுக்கு 15 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. கொவிட்-19 நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறை ஹொட்டல் பணியாளர்களுக்கு மாதாந்தம் 20 ஆயிரம் ரூபா என்ற ரீதியில் ஆறு மாத காலக் கடன் வசதிகள் வழங்கப்படவுள்ளன.

சுகாதார விதிமுறைகளை அனுசரித்து நாளாந்தம் சுமார் 300 சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கத் திட்டமிடப்படுகிறது - என்றார். (ப)

# சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை அமைக்கத் திட்டம்

கொழும்பு, டிசெ.8

இலங்கை பெருந்தோட்டச் செய்கையாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் 21 கம்பனிகளுக்கு சொந்தமான தோட்டங்களில் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இவற்றுடன் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 258ஆக அதிகரிக்கும் என்று சங்கத்தின் தலைவர் பாத்திய புலுமுல்ல தெரிவித்தார். இந்த நிலையங்களை அமைக்கும் பொறுப்பு பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ப)

கொரோனாவால் இறந்த


# 12 பேரின் சடலங்கள் உரிமை கோரப்படவில்லை

கொழும்பு, டிசெ.8

கொரோனாத் தொற்றால் உயிரிழந்த 12 பேரின் உடல்கள் இதுவரை அவர்களது உறவினர்களால் உரிமை கோரப்படவில்லை என சுகாதார அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு உரிமை கோரப்படாமல் காணப்படும் உடல்கள் பெரும்பாலும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட முஸ்லிம்களின் உடல்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் உரிமை கோரப்படாத உடல்களை அரசாங்க செலவில் தகனம் செய்ய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஏற்கனவே அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், உரிமை கோரப்படாத உடல்களை தகனம் செய்வதற்கு முன் சட்ட ஆலோசனை பெறப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிலர், முஸ்லிம்களாக இருப்பதால், அரசாங்கம் வழங்கிய வழிகாட்டுதல்களின் படி தகனம் செய்ய வேண்டியிருப்பதால் உடல்களை ஏற்க மறுத்துவிட்டனர். எனினும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்பட வேண்டும், அடக்கம் செய்யப்படக்கூடாது எனப் பரிந்துரைத்துள்ளது. இந்தக் குழு அடுத்த இரண்டு மாதங்களில் நிலைமையை மதிப்பாய்வு செய்து இறுதி முடிவை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



# படைப்புழுத் தாக்கத்தால் நெற்செய்கை பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ.8

முல்லைத்தீவு - முள்ளியவளை கமநலசேவை நிலைய பிரிவுக்கு உட்பட்ட, மதவளசிங்கன் குளத்தின் கீழ் உள்ள வயல் நிலங்களில் படைப் புழுத் தாக்கம் அதிகரித்துள்ளதால், தமது நெற்செய்கைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

படைப்புழுவின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அதனைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இந் நிலையில் வாழ்வாதாரத்தை நோக்காகக் கொண்டு தம்மால் செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்செய்கையில், படைப் புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளதால், தமது வாழ்வாதாரம் பொய்த்துப்போகும் அபாயம் உள்ளது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் படைப்புழுவால் பாதிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களுக்கு நேரடியாக வருகைதந்து பார்வையிடுவதுடன், படைப்புழுவின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-246)

# ஐ.தே.க. ஊழியர்களுக்கு ரணிலின் நன்கொடை

கொழும்பு,நவ.8

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் பணியாற்றும், ஊழியர்கள் அனைவருக்கும் சம்பளம் வழங்குவதற்காக, ரணில் விக்கிரமசிங்க, தனது சொந்த நிதியிலிருந்து, 3 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இதனை கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் ஷமால் செனரத் உறுதிபடுத்தினார்.

சிறிகொத்தவில் பணியாற்றும் 36 பணியாளர்களுக்கு சம்பளத்தை வழங்குவதற்காகவே, கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த நன்கொடையை வழங்கியுள்ளார்.

சவாலான சூழ்நிலைகளிலும் அவர் தனது கடமைகளை ஒருபோதும் புறக்கணித்தது இல்லை என்று பிரதிப் பொதுச் செயலாளர் பெருமைபடத் தெரிவித்தார்.

சிறிகொத்தவுடன் இணைக்கப்பட்ட ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாது, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகம் திண்டாடி வருகிறது என்று சமீபத்தில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அதேவேளை நாடாளுமன்றத் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த தேசிய பட்டியல் இடத்துக்கு, இன்னும் எந்தவொரு உறுப்பினரும் பரிந்துரைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)

# ஐயப்ப பக்தன் வேடமிட்டு ஐ போன் கொள்ளை

கொடிகாமம் டிசெ.8

ஐயப்பன் பக்தனாக வேடமிட்டு நிதி சேகரிக்கச் சென்ற ஆசாமியால், வீடு ஒன்றில் இருந்த ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான ஐ போன் ஒன்று கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராமாவில் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

ஐயப்பசுவாமிக்கு நிதி சேகரிக்கிறேன் என குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குச் சென்ற ஆசாமி, வீட்டினுள் இருந்த பெறுமதி வாய்ந்த ஐபோனை அபகரித்துச் சென்றுள்ளார் என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப-150)

புரேவியின் தாண்டவம்

# குலைகளுடன் சரிந்தன வாழைத் தோட்டங்கள்

## விவசாயிகள் பெரும் பாதிப்பு

கிளிநொச்சி, டிசெ.8

புரேவி புயல் காரணமாக கிளிநொச்சி முழங்காவில் பிரதேசத்தில் சுமார் 50 ஏக்கர் வரையான வாழைத்தோட்டங்கள் அழிவடைந்துள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடும் மழை மற்றும் புயல் காரணமாக குலைகளுடன் வாழை மரங்கள் சரிந்து வீழ்ந்துள்ளன.

மிகவும் சிரமத்துக்கு மத்தியில் கடந்த வறட்சி காலத்திலும் பாதுகாத்து வளர்த்தெடுத்த வாழை மரங்கள் அறுவடைக்கு முன் இவ்வாறு அழிவடைந்துள்ளமையால் பெரும் இழப்பை எதிர்நோக்கியுள்ளோம் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ-214)

# வீரவில சிறைச்சாலையில் 74 கைதிகளுக்கு கொரோனா

கொழும்பு,டிசெ.8



வீரவில சிறைச்சாலையின் 74 கைதிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏனைய சிறைச்சாலைகளில் இருந்து தனிமைப்படுத்தலுக்காக வீரவில சிறைச்சாலைக்கு, மாற்றப்பட்டவர்களுக்கே கொவிட்19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை சிறைச்சாலைக் கைதிகளுடன் தொடர்புடையவர்களுக்கு, பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது என்று பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சிறைச்சாலைகளில் கொவிட்-19 தொற்றுறுதியானவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 200 ஆக அதிகரித்துள்ளது. (க-இ)

# சீனி இறக்குமதியில் சதொச முறைகேடு



கொழும்பு, டிசெ. 8

சதொச நிறுவனத்துக்காக இறக்குமதி செய்யப்பட்ட 5 ஆயிரம் மெற்றிக்தொன் சீனி தொடர்பில், உரிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

சீனியை அரசியல் முக்கியஸ்தர் ஒருவரின் நெருங்கியவரே இறக்குமதி செய்துள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறக்குமதியின் போது இறக்குமதி வரி குறைத்து அறவிடப்பட்டுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனினும் இதனை மறுத்துள்ள சதொச நிறுவனத்தின் தலைவர் நுஸாத் எம்.பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்கவின் கூற்றில் உண்மையில்லை.

எந்தவொரு கட்டத்திலும் இறக்குமதிச் சட்டங்கள் மீறப்படவில்லை. அத்துடன் இது வர்த்தக அமைச்சின் செயலாளர் உட்பட்ட அனைவருக்கும் தெரிந்த விடயம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை குறித்த சந்தர்ப்பத்தில் 5 ஆயிரம் மெற்றிக்தொன் சீனி இறக்குமதி செய்யப்படவில்லை. 750 மெற்றிக்தொன் சீனியே கொள்வனவு செய்யப்பட்டது என்றும் சதொசவின் தலைவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## வெள்ளத்தில் நனைந்து கால்நடைகள் உயிரிழப்பு

சாவகச்சேரி, டிசெ.8

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு 5 மாடுகள் மற்றும் 4 ஆடுகள் உயிரிழந்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று மந்துவில் வடக்கில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த சி.சிவஞானமூர்த்தி என்பவருடைய 3லட்சம் ரூபா பெறுமதியான மாடுகளும், சுப்பிரமணியம் செல்லம்மா என்பவரின் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆடுகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளன. மழை வெள்ளம் அனைத்து இடங்களிலும் தேங்கிக் காணப்பட்டதால் படுக்க,நிற்க முடியாத நிலையில் ஒன்றன்பின் ஒன்றாக அவை வீழ்ந்து இறந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ப-9)

## மின்னல் தாக்கி 9 பசுக்கள் சாவு

மட்டக்களப்பு, டிசெ.8

சீரற்ற வானிலை காரணமாக மட்டக்களப்பு செங்கலடி செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மயிலத்தமடு மற்றும் மாதவனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு பெய்த இடியுடன் கூடிய மழையின் போது மின்னல் தாக்கியதில் 9 பசுக்கள் உயிரிழந்துள்ளன.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பேரில்லாவெளி பகுதியைச் சேர்ந்த செல்லத்தம்பி பஞ்சாயுதம் என்பவரின் பசுக்களே இவ்வாறு உயிரிழந்துள்ளன.

பட்டியில் அடைக்கப்பட்டிருந்த பசுக்கள் மீதே மின்னல் தாக்கியுள்ளது. சம்பவம் தொடர்பாக உரிமையாளர் கரடியனாறு மிருக வைத்தியசாலை வைத்திய அதிகாரி அப்பகுதி கிராமசேவகர் மற்றும் கரடியனாறு பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார். (ப)

### வெள்ளப் பாதிப்பால்

## இடம்பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள்

சாவகச்சேரி, டிசெ.8

தென்மராட்சி பிரதேசத்தில் வெள்ளத்தால், பாதிக்கப்பட்டு உறவினர் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு பிரதேச செயலகத்தால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இவற்றுடன் வேள்ட் விஷன் நிறுவனத்தால்.வழங்கப்பட்ட சுகாதாரப் பொதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தில் நேற்றுக் காலை வரை 2 ஆயிரத்து 524 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 531 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயம்,மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்,மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், போக்கட்டி பாடசாலை ஆகியவற்றில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 66 குடும்பங்களைச் சேர்ந்த 236 பேர் தங்க வைக்கப்பட்டு பிரதேச செயலகத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இதுவரை ஐந்து வீடுகள் முழுமையாகவும் 791 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. (ப-9)

## தங்க நகைகளைத் திருடி போலி நகைகள் வைப்பு

### சந்தேக நபரைக் கைதுசெய்ய இரு பொலிஸ் குழுக்கள் களத்தில்

கண்டி, டிசெ.8

கலஹா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லூல்கந்தூர தோட்ட உதவி அதிகாரியின் வீட்டில் 10 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களைத் திருடி, போலி நகைகளை வைத்துவிட்டு தலைமறைவான சந்தேகநபரைக் கைதுசெய்ய இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி தோட்டத்தின் இரண்டாம் நிலை அதிகாரியின் பங்களாவில் (வீட்டில்) தோட்ட வேலை செய்து வந்த நபரையே பொலிஸார் சந்தேகத்தில் தேடி வருகின்றனர். குறித்த தோட்ட அதிகாரியின் மனைவி கண்டி நகரில்அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியையாக கடமையாற்றி வரும் நிலையில் சந்தேகநபர் வீட்டில் யாரும் இல்லாத சந்தர்ப்பங்களில் அதிகாரியிடம் இருக்கும் அலுமாரியின் சாவியைத் திருடி அங்கு வைக்கப்பட்டிருந்த தங்கச் சங்கிலி, மோதிரம் மற்றும் வளையல் என்பவற்றை கட்டம் கட்டமாகத் திருடிய சந்தர்ப்பங்களிலெல்லாம் குறித்த தங்க நகைகளுக்கு பதிலாக போலிகளை வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்குழுவுக்கு, றோயல் கல்லூரி மாணவர்களால் வழங்கப்பட்ட நிதியில், யாழ். கல்லூண்டாய் பகுதியில் 40 குடும்பங்களுக்கு நுளம்புவலைகள் வழங்கப்பட்டன. (க)



வவுனியாவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களுக்கு (தறப்பாள்) கூரை விரிப்புக்கள், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரால் வழங்கப்பட்டன. (க)



கொடிகாமம் மத்தி-கொலணி பகுதியில் 250 அங்கத்தவர்களுக்கு, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான சி.கஜேன் மற்றும் ஜெ.நிதர்சன் ஆகியோர் இணைந்து மதிய உணவை வழங்கினர். சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனின் நிதிப் பங்களிப்பில் உணவு வழங்கப்பட்டது. (க-159)



வடக்கு மாகாண இரட்சணிய சேனை நிலையத்தினரால், ஜே-73 கிராம அலுவலர் பிரிவில், 80 குடும்பங்களைச் சேர்ந்த 400 அங்கத்தவர்களுக்கு ஆரியகுளம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக்களுக்கு இரவு உணவு வழங்கப்பட்டது. (க-159)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பூநகரியின் பல பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட, கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர், உடனடி உதவிகளையும் வழங்கினார். (க-222)



## உருவப் படம் திரை நீக்கம்

சாவகச்சேரி, டிசெ.8
மீசாலை கிழக்கு மதுவன் சனசமூக நிலைய முன்னாள் தலைவரின் உருவப்படம் நேற்று முன்தினம் திரைநீக்கம் செய்யப்பட்டது.
முன்னாள் தலைவர் அமரர் செ.இராசமணியின் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டி நிலைய மண்டபத்தில் அவரது உருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. நிலைய உப தலைவர் நா.சரவண முத்து அதை திரைநீக்கம் செய்தார். (ப -9)

## வெள்ளத்துடன் வந்த முதலையால் பதற்றம்

சாவகச்சேரி, டிசெ.8
வெள்ளத்துடன் வந்த முதலையால், மகிழங்கேணி பகுதி மக்கள் அச்சம்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கடந்த நாள்களாகப் பெய்துவரும் கனமழையை அடுத்து. குடாநாட்டின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. குளங்களின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளது. இவ்வாறான நிலையில், நேற்று சாவகச்சேரி மகிழங்கேணி பகுதியிலுள்ள வாய்க்காலூடாக முதலை ஒன்று கிராமத்துக்குள் வந்துள்ளது. இதை சிலர் அவதானித்துள்ளனர். இந்தத் தகவல் கிராமத்தில் உள்ளவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. முதலையால் அச்சமடைந்த மக்கள், அது தொடர்பில் அந்தப் பிரிவு கிராம அலுவலர் மற்றும் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். (ப-9)

## ஆற்றங்கரை ஓரங்களில் மண் அணைகள் அமைப்பு



கிளிநொச்சி, டிசெ.8
கிளிநொச்சி வெலிக்கண்டல் பாலத்திலிருந்து கனகராயன் ஆறு துப்புரவு செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது ஆற்றங்கரை ஓரங்களில் மண் அணைகள் அமைப்பதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன.
நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் இணைந்து கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அந்த வேலைகளில் ஈடுபட்டுள்ளது. இரணைமடுக் குளத்தின் கீழ் பகுதிகளில் ஏற்படும் வெள்ள அனர்த்தத்தைக் குறைப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிதி உதவியுடன் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது. (ப-222)

# புரேவிப் புயலின் அகோரம்; காணாமல் போனது கடற்கரை வீதி

### மூன்றாம் பிட்டி மீனவர்கள் கவலை

மன்னார்,டிசெ.8
**கடந்த வாரம் வடக்கு கிழக்கை அச்சுறுத்திய புரேவிப் புயல் காரணமாக மன்னார் மாவட்டத்தில் கடும் காற்றுடன் பெய்த கன மழையால் மன்னார் மாந்தை மேற்கு பிரதேசத்தில் உள்ள மீனவக் கிராமமான மூன்றாம் பிட்டிக் கிராமத்தின் கடற்கரை வீதியைக் காணவில்லை என்று மீனவர்கள் பதற்றத்துடன் தெரிவித்தார்கள்.**



இது தொடர்பாக மீனவர்கள் தெரிவித்ததாவது;
கடந்த வாரம் புரேவிப் புயலுடன் கூடிய கனமழையால் எமது படகுகள் வலைகள், வாடி வீடுகள் சேதப்படுத்தப்பட்டு கடலினுள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன.
இதுவரை காலமும் நாம் பாவித்து வந்த கடற்கரை வீதி, சேதமாக்கப்பட்டு வீதி ஒன்று இருந்தமைக்கான அடையாளம் இல்லாமலேயே போயுள்ளது. இந்தப் பகுதிக்கு தடுப்பு அணையை அமைத்துத் தருமாறு அரசியல்வாதிகள் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தும் அவை செய்து தரப்படவில்லை. உரிய முறையில் தடுப்பணை அமைத்துக் கொடுத்திருந்தால் எமக்கு இவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்காது -என்றனர். (ப-213)





## மழை வெள்ளத்தில் சிக்கி கால்நடைகளும் உயிரிழப்பு

### மன்னாரில் சம்பவம்

மன்னார், டிசெ.8
புரேவி புயலை அடுத்து பெய்த கடும் மழை காரணமாக மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரிய மடு குளப் பகுதியில் மேய்ச்சலுக்குச் சென்ற அதிகளவான கால் நடைகள் பலியாகியுள்ளதுடன், காணாமலும் போயுள்ளன.
மன்னார் - பெரியமடு குளத்தை அண்டிய பகுதியில் மேச்சலுக்காகச் சென்ற நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட காற்றுடன் கூடிய தொடர் மழையால், ஏற்பட்ட வெள்ளத்தில் அதிகளவான மாடுகள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன் சில மாடுகள் இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.
இது தொடர்பில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மற்றும் பிரதேச செயலகம் உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து காணாமல் போன கால் நடைகளை மீட்கும் பணிகளை கடற்படை, இராணுவம் மற்றும் பொதுமக்கள் முன்னெடுத்தனர்.
இதன்போது அதிகமான மாடுகள் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டன. காணாமல் போன ஏனைய மாடுகளை மீட்கும் பணியில் கடற்படை மற்றும் மாவட்ட, பிரதேச செயலகங்கள் ஈடுபட்டு வருகின்றன. (ஐ-56)

## கசிப்புடன் ஒருவர் கைது

கிளிநொச்சி.டிசெ.8
கிளிநொச்சி தருமபுரம் சுண்டிக்குளம் பகுதியில் 65 போத்தல் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
தருமபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கடந்த சனிக்கிழமை சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.
விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்று தருமபுர பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்தார். (ஐ-113)

## கரைச்சியில் சிறப்பாக நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச மாற்றுத்திறனாளிகள் அமைப்பால் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு ஆனந்தநகர் பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.
நிகழ்வில் 100 நிவாரணப் பொதிகள், 6 சைக்கிள்கள், கற்றல் உபகரணங்கள் மற்றும் மதிய உணவு என்பன வழங்கப்பட்டன.
நிகழ்வில் மருத்துவ அதிகாரி இ. லிங்கநாதன், பிராந்திய சுகாதார திணைக்களம் மாவட்ட சமூகசேவை



அபிவிருத்தி அலுவலர்கள், சமுதாய முன்னேற்ற பணிப்பாளர் மற்றும் வேல்ட் விசன் திட்டமுகாமையாளர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-222)

## வயல் குளம் நிரம்பியதால் 10 ஏக்கர் நெற்பயிர் அழிவு

கொடிகாமம், டிசெ.8
புரேவி புயலுடன் கூடிய கனமழையால், மீசாலை வடக்கு இராமாவில் கிராம அலுவலர் பிரிவின் உண்ணிய வயல் குளம் நிரம்பி வெளியேறியதன் காரணமாக நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
வெள்ளம், வீதியை மூடி அதன் அயலில் காணப்படுகின்ற சுமார் 10 ஏக்கர் வயல் நிலங்களை மூடிக் காணப்படுவதால் வயல் நிலங்கள் முற்றாகப் பாதிப்படைந்துள்ளன என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ப-159)

# மேல் மாகாணத்தில் தொற்று அதிகரிப்பு



### பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, டிசெ.8**
**மேல் மாகாணத்தில் சனநெரிசல் அதிகமாக உள்ள பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ளது என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.**

இந்த நிலையில், பி.சி.ஆர் பரிசோதனை செய்துகொண்டவர்கள் அதன் முடிவுகள் கிடைக்கும்வரை வேறு பகுதிகளுக்கு செல்வதைத் தவிர்க்க வேண்டும் என அந்த சங்கத்தின் செயலாளர் மஹிந்த பாலசூரிய மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். கடந்த சில நாள்களாக குறைந்தளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட பொரளை மற்றும் கறுவாத்தோட்டப் பகுதிகளில் தற்போது நோயாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்படுகின்றனர். மேல் மாகாணத்தின் ஏனைய பகுதிகளுக்கும் இந்த நோய் பரவுதை அவதானிக்க முடிகிறது. அத்துடன், அக்குறணை, நுவரெலியா, ஹற்றன், அம்பகமுவ மற்றும் குருநாகல் மாநகர எல்லை பகுதிகளும் இந்த நிலைமையில் உள்ளன எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)

## புதுமுறிப்புக் குளத்தின் நீர்மட்டம் உயர்வு

### அவதானமாக இருக்குமாறு மக்களிடம் வேண்டுகோள்

புதுமுறிப்புக் குளத்தின் நீர்மட்டம் நேற்று 18.03 அடியை அடைந்துள்ளது என வட மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. குளத்தின் முழுக்கொள் ளளவு 19 அடி ஆகும்.
எனவே மழை தொடர்ந்தால் வான்பாயக் கூடிய சாத்தியப்பாடு உள்ளது.
எனவே வான் பாயும் பகுதிக்கு அண்மையிலுள்ள சோலைநகர், உருத்திரபுரம் மேற்கு மற்றும் சிவநகர் பிரதேச மக்கள் மிக அவதானத்துடன் இருப்பதுடன் கால்நடைகளையும் உயர்வான நிலப்பகுதிகளுக்கு கொண்டு செல்லுங்கள் என மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ந)

## காலியில் பாடசாலைகள் மூன்று நாள்கள் பூட்டு

காலி, டிசெ.8
காலி கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் மாகாண ஆளுநர் வில்லி கமகே விடுமுறை அறிவித்துள்ளார். அதன்படி, கல்வி வலயத்திலுள்ள 26 பாடசாலைகளும் நேற்று தொடக்கம் மூன்று நாள்களுக்கு மூடப்பட்டுள்ளன.
இதேவேளை, கொரோனாத் தொற்று அபாயத்தால் மூடப்பட்டுள்ள பாடசாலைகளைத் தவிர ஏனைய அனைத்து பாடசாலைகளும் கடந்த நவம்பர் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தன.
இந்நிலையில், தரம் ஆறு முதல் 13 வரையான வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமே கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## உத்தியோகபூர்வ வாகனம் இன்னும் கிடைக்கவில்லை!

### அமைச்சர்கள் விசனம்

கொழும்பு, டிசெ.8
புதிதாக நியமனம் பெற்ற அமைச்சர்கள், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பலரும் தங்களுக்கு உத்தியோகபூர்வ வாகனம் கிடைக்காததால் ஜனாதிபதியிடம் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.
இவர்களில் பலர் அமைச்சுக்களின் வாகனங்களை பயன்படுத்தி வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.
எனினும் வாகனம் இல்லாத அமைச்சர்களுக்கு அரசாங்கத்திடம் தற்சமயம் உள்ள வாகனங்களை வழங்க ஆலோசனை செய்யப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-இ)

## பாடசாலை மாணவர்களால் போக்குவரத்து நெரிசல்

### கூறுகிறார் பெருந்தெருக்கள் அமைச்சர்

கொழும்பு, டிசெ.8
பாடசாலைகளுக்கு அருகில் மாணவர்கள் வீதியைக் கடப்பதால், கொழும்பு உள்ளிட்ட சில நகரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது என பெருந்தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
சகல பிரதான நகரங்களிலும் உள்நுழையும் பிரதான பாதைகளின் இருமருங்கிலும் பாடசாலைகள் காணப்படுகின்றன. இதனால் வாகன நெரிசல் ஏற்படுகின்றது எனத் தெரிவித்த அவர், சுரங்க வழி அல்லது சிறிய மேம்பாலங்களை அமைத்து இதன் மூலம் மாணவர்கள் வீதிகளைக் கடக்க நடவடிக்கை எடுப்பதன் ஊடாக வாகன நெரிசலை குறைக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)



## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: 90 வீத விசாரணை நிறைவு

கொழும்பு, டிசெ.8
உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான 90 வீத பொலிஸ் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.
கோட்டை - மாதிவெல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். 37 பேருக்கு எதிராக மனிதக் கொலை சூழ்ச்சி தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உள்ளன.
ஏனையவர்களுக்கு பயங்கரவாதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளன.
இந்த நடவடிக்கைகளை சட்டமா அதிபர் விரைவுபடுத்தும் பட்சத்தில் குற்றவாளிகளை எம்மால் அடையாளம் கண்டுகொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)



## 'ரேஸ்' விட்டவர்கள் பொலிஸாரால் கைது!

கொழும்பு, டிசெ.8
உந்துருளி ஓட்டப்பந்தயம் ஒன்றை நடத்துதற்கு தயாரான இளைஞர்கள் குழு ஒன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். கிம்புளாவெலயில் இருந்து சிறி ஜெயவர்தனபுர மருத்துவமனை வரையில் அவர்கள் இந்தப் போட்டியை நடத்தத் திட்டமிட்டிருந்தனர். (ற-இ)

## கொரோனாவை கண்டறிய டுபாயில் புதிய இயந்திரம்!!

### இலங்கையரால் கண்டுபிடிப்பு

டுபாய், டிசெ.8
டுபாயில் கொரோனாத் தொற்றுக்குள்ளான நோயாளி ஒருவரின் உடலில் இருக்கும் வைரஸ் தொற்றை அழிக்கக்கூடிய வகையில் இயந்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது சி.வி.டி.எம் எனப்படும் இயந்திரம் ஆகும்.
டுபாய் நாட்டில் விமானம் மற்றும் மின்சார ரயில் பொறியியலாளராக செயற்படும் இலங்கையரான ஜீவனாந்த டி சில்வா என்பவரால் இந்த இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இது கொரோனாத் தொற்றுக்குள்ளான ஒருவரின் உடலில் இருக்கும் வைரஸை 10 நொடிகளில் அழிந்துவிடக் கூடியது என்றும் இது தொடர்பான வெற்றிகரமான முடிவுகளை மேலும் வலுப்படுத்த தேவையான



ஆய்வக வசதியை அரச மற்றும் தனியார் நிறுவனத்தின் தலையீட்டில் விரைவில் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். விரைவாக இதற்கான நடவடிக்கையை எடுத்தால் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்ற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை உடலினுள் இருக்கக் கூடிய வைரஸை அழிக்கக் கூடிய இயந்திரம் ஒன்று முதல் முறையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-இ)

# சனிப்பெயர்ச்சி ராசிபலன்கள்!

ராசி மண்டலத்தில் வலம் வரும்போது, சந்திரன் இருக்கும் ராசியிலிருந்து பன்னிரண்டிலும், சந்திரன் இருக்கும் ராசியிலும், அடுத்து சந்திரனில் இருந்து 2ஆவது ராசியிலும் இரண்டரை வருடங்கள் தங்கியிருந்து, பயணிப்பார் சனி.

ஏழரைச் சனி என்றதும் பயம்கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜென்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர். நம்மை வளர்த்து, நமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, இன்ப,துன்பங்களை வினைப்படி செயல்படுத்தி, வாழவைப்பவர்.

நிகழும் சார்வரி வருடம் மார்கழி 11ஆம் நாள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை இரவு 4:49 மணிக்கு (விடிந்தால் 27.12.2020) உத்திராடம் நட்சத்திரம் 2ம் பாதம் மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார் (வாக்கியப் பஞ்சாங்கப்படி). இந்தப் பெயர்ச்சியில் பன்னிரு ராசிகளுக்கும் அவர் அருளப்போகும் பலாபலன்கள் இங்கே தரப்படுகின்றன.



## சிம்மம்

மனத் தூய்மை மிக்கவர் நீங்கள். பல வகைகளில் உங்களை வாட்டியெடுத்த சனி பகவான் இப்போது 27.12.2020 முதல் 19.12.2023 வரை 6ம் வீட்டில் அமர்கிறார். ஆகவே, விபரீத ராஜ யோகத்தை அள்ளித் தருவார்.

மனஇறுக்கமும் கோபமும் விலகும். தடுமாற்றம் நீங்கும். நல்ல வாய்ப்புகள் அமையும். பக்குவமாகப் பேசி பல காரியங்களையும் கச்சிதமாக முடிப்பீர்கள். உங்கள் முகம் இனி தெளிவடையும். பிள்ளைச் செல்வம் இல்லாத குறை நீங்கும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

பிள்ளைகள் இனி உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். மகளின் கல்யாணத்தை ஊரே மெச்சும்படி சிறப்பாக நடத்துவீர்கள். உங்களை அலட்சியப்படுத்திய சொந்த பந்தங்கள், நண்பர்கள் இனி தேடி வந்து உறவாடுவார்கள்.

சிலர், சொந்த வீடு கட்டி குடிபுகுவீர்கள். மகனுக்குத் தெரிந்த இடத்தில் சம்பந்தம் அமையும். பழைய கடனை கொஞ்சம் கொஞ்சமாக வசூல் செய்வீர்கள். வீடு கட்ட, வாங்க, தொழில் தொடங்க வங்கிக் கடன் உதவி கிடைக்கும். 29.03.2023 முதல் 24.08.2023 வரை சனி பகவான் அதிசாரத்தில் 7ம் வீடான கும்பத்தில் சென்று அமர்வதால் எதிலும் தடுமாற்றமும் வீண் செலவுகளும் வந்துபோகும்.

சனி பகவான் உங்களின் 3ம் வீட்டைப் பார்ப்பதால் தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் கௌரவம் கூடும். குடலுக்கும் உடலுக்கும் கேடு விளைவிக்கும் உணவுகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டாம். சனி பகவான் 8ம் வீட்டைப் பார்ப்பதால் வாகனங் களை இயக்கும்போது கவனம் தேவை. யாருக்கும் ஜாமீன் கையெழுத்திடாதீர்கள். மகான்களின் தரிசனம் கிடைக்கும். சனி பகவான் 12ம் வீட்டைப் பார்ப்பதால், வராது என்று நினைத்திருந்த பணமும் கைக்கு வரும்.

**சனி பகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

உங்களின் ராசிநாதனான சூரியனின் உத்திராடம் நட்சத்திரத்தில் 27.12.2020 முதல் 27.12.2021 வரை சனி பகவான் செல்வதால், இக்காலகட்டத்தில் நினைத்த காரியங்கள் நிறைவேறும். எதிர்த்தவர்கள் வீழ்வார்கள்.

தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்துச் சிக்கல்கள் தீரும். மகான்கள், சித்தர்களின் ஆசி கிட்டும். இதற்கிடையில் 11.05.2021 முதல் 26.09.2021 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால், நெஞ்சு வலி, முதுகுத் தண்டில் வலி வரக் கூடும். மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகளை எடுக்கவேண்டாம்.

உங்களின் விரய ஸ்தானாதிபதியான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில் 28.12.2021 முதல் 26.01.2023 வரை சனி பகவான் செல்வதால், சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். 25.05.2022 முதல் 09.10.2022 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால் பணத்தட்டுபாடு, ஏமாற்றம், துரோகங்களைச் சந்திக்க நேரிடும்.

உங்களின் சுகபாக்கியாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 27.01.2023 முதல் 19.12.2023 வரை சனிபகவான் செல்வதால் திடீர் யோகங்கள், சொத்துச் சேர்க்கை உண்டு. கௌரவப் பதவிகள் தேடி வரும்.

27.06.2023 முதல் 23.10.2023 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால், புதிய சொத்து வாங்குவீர்கள். வேலை கிடைக்கும்.

இல்லத்தரசிகளே! தாம்பத்தியம் இனிக்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வார்கள். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

வியாபாரிகளுக்கு அதிரடி லாபம் கிடைக்கும். மீதித் தொகைகள் உடனடியாக வசூலாகும். மக்களின் ரசனைக்கேற்ற பொருள்களைக் கொள்முதல் செய்வீர்கள்.

புகழ்பெற்ற நிறுவனங்களுடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். வியாபாரிகள் சங்கத்தில் பெரிய பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். கூட்டுத் தொழில் வளர்ச்சி அடையும்.

உத்தியோகஸ்தர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். அதிக சம்பளத்துடன் நல்ல வேலையில் சென்று அமர்வீர்கள்.

எதிர்பார்த்தபடி பதவி உயர்வு, சம்பளம் உயர்வு எல்லாம் உண்டு. வெகுநாள்களாக போராடிய சம்பள பாக்கியும் கைக்கு வரும். மேலதிகாரியுடன் இருந்த மோதல் நீங்கும். உத்தியோகம் சம்பந்தப்பட்ட வழக்கில் வெற்றி பெறுவீர்கள். கணினித் துறையில் இருப்பவர்களுக்கு அயல்நாட்டுத்தொடர்புடைய புதிய நிறுவனங்களில் நல்ல சம்பத்துடன் வாய்ப்பு கிடைக்கும். இந்த சனிப் பெயர்ச்சி திடீர் யோகங்களை அளிக்கும்.

**பரிகாரம்: சிவ தரிசனம் நன்மை சேர்க்கும். சனி பகவானை தரிசித்து வாருங்கள்; சந்தோஷம் பெருகும்.**

---

# போதையில் விபத்து
## பொலிஸ் அதிகாரி கைது!

கொழும்பு, டிசெ.8

மது போதையில் வாகனம் செலுத்தி, விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட் டில் கண்டி பொலிஸ் நிலையத்தின் விஷேட குற்றவியல் விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி, கட்டுகஸ்தோட்டப் பொலிஸரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த பொலிஸ் பொறுப்பதிகாரி செலுத்திய கார், கட்டுகஸ்தோட்ட பொலிஸ் பிரிவின், குருநாகல் கண்டி பிரதான வீதியின் யட்டிவாவல பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் செலுத்துநர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்து தொடர்பில் கட்டுகஸ்தோட்ட போக்குவரத்துப் பிரிவின் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், சந்தேகநபரான பொலிஸ் அதிகாரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (ந-இ)

# கட்டியணைத்த அதிகாரி பணிநீக்கம்

கொழும்பு, டிசெ.8

ஏனையோருக்கு கொரோனா பரப்பியதைப் போன்று, உங்களுக்கும் கொரோனாவைப் பரப்ப வேண்டும்' எனத் தெரிவித்து, பிரதான சிறை வாயில் காவலர் உள்ளிட்ட பலரை கட்டியணைத்த சிறைச்சாலை அதிகாரியொருவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

வட்டரக்க சிறைச்சாலையின் சிறைக்காவலர் ஒருவரே இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையின் பின்னர், விசேட கடமைகளுக்காக வட்டரக்க சிறைக்காவலர்கள் மஹர சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்ட நிலையில், அவர்கள் சில தினங்களில் மீண்டும் வட்டரக்க சிறைச்சாலைக்கு வந்துள்ளனர்.

இதன்போது பிரதான வாயில் காவலர் மற்றும் விசேட கடமை களுக்காக சென்றவர்கள் 14 நாள்கள் சுயதனிமையில் இருப்ப தற்கான ஒழுங்குமுறை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தபோதே குறித்த சிறைக்காவலர் இவ்வாறு அநாகரிகமாக நடந் து கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# கிழக்கில் 393பேருக்கு கொரோனாத் தொற்று!
## அக்கரைப்பற்றுக் கொத்தணி பாதிப்பு 235ஆக அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 8

கிழக்கு மாகாணத்தில் நேற்று மட்டும் 45 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: மட்டக்களப்பில் நேற்று மட்டும் மாலை வரை (நேற்றுமுன்தினம் மாலை வரை) அக்கரைப்பற்றில் 42 பேருக்கும், ஆலையடிவேம்பு, சாய்ந்தமருது மற்றும் பட்டிப்பளையில் தலா ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து கிழக்கு மாகாணத்தில் மொத்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 393ஆக அதிகரித்துள்ளது. அதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் 282 பேரும், மட்டக்களப்பில் 95 பேரும், திருகோணமலையில் 16 பேரும் இதுவரை கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிழக்கில் அக்கரைப்பற்றுக் கொத்தணி மூலம் 235 பேரும், மினுவாங்கொடை மற்றும் பேலியகொட கொத்தணிகள் மூலம் 158 பேரும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்றுக் கொத்தணி பாதிப்பு மேலும் அதிகரிக்கலாம்



## இன்றைய நாள்



**மேடம்:** சக பணியாளர்களின் ஒத்துழைப்பு முன்பைவிட அதிகரிக்கும். பிள்ளைகளின் செயல்கள் உங்களைப் பெருமைப்பட வைக்கும். உங்கள் வாழ்வில் முன்னேற்றமான சூழ்நிலை தென்படும்.



**இடபம்:** யோகமான நாள். முயற்சிகளில் நற்பலன் கிடைக்கும். நீண்ட நாளாக செய்ய நினைத்த ஒரு செயலை முடிப்பீர்கள். செலவுகள் ஏற்படலாம். பிரச்னைகள் மெல்ல அகலும்.



**மிதுனம்:** குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். முன்னேற்றம் உண்டு. நண்பர்களிடம் மனம் திறந்து பேசி அன்பைப் பெறுவீர்கள். புதிய விஷயங்களைக் கற்பதில் ஆர்வம் கொள்வீர்கள்.



**கடகம்:** சரியாகத் திட்டமிட்டுச் செய்யும் விஷயங்கள் வெற்றி பெறும். உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக எதையும் செய்வதால் நிம்மதி உண்டு. தடைகள் அகலும்.



**சிம்மம்:** சிலரது செயல்கள் கோபத்தைத் தூண்டும்படியாக இருக்கலாம். அதிக நேரம் வேலை பார்க்க வேண்டி வரும் ஆயுதங்களைக் கையாளும்போது அதிக கவனம் தேவை. கவலைகள் தீரும்.



**கன்னி:** மன நிறைவு ஏற்படும். எல்லாம் விரைவாக நடக்கும். வாழ்க்கைத் துணையால் நன்மை உண்டாகும். நோய் தீரும். பிள்ளைகளுக்காக பாடுபடுவீர்கள். உணர்ச்சிவசப்படுவீர்கள்.



**துலாம்:** வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும். வளர்ச்சி கூடும். வாகனம், வீடு வாங்கும் சிந்தனை செயல்வடிவம் பெறும். கூடுதல் பணி சுமை காரணமாக சோர்வு உண்டாகும்.



**விருச்சிகம்:** தாய்வழி உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் விலகும். பொருளாதார நிலை உயரும். முயற்சிகளில் வெற்றி உண்டு. தேக்கநிலை மாறித் தெளிவு பிறக்கும். தாயின் நோய் தீரும்.



**தனுசு:** அக்கம் பக்கத்து வீட்டாருடன் ஏற்பட்ட சண்டை முடிவுக்கு வரும். பிள்ளைகளின் வெளிநாட்டு முயற்சி வெற்றியடைந்து மகிழ்விக்கும்.



**மகரம்:** குடும்பத்தில் ஒருவருக்கு ஏற்பட்ட பிரச்னைகள் அகலும். எச்சரிக்கையாக இருக்கவும். அநாவசியப் பயணங்கள் ஏற்படலாம். அவசர முடிவுகளை எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.



**கும்பம்:** விழிப்புடன் செயல்பட்டு அபாயத்திலிருந்து தப்பிப்பீர்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவதால் கையிருப்பு கரையும்.



**மீனம்:** உடன் பிறந்தவர்கள் உதவிகரமாக இருப்பார்கள். பண வரவு உண்டு. தொழில் வியாபாரத்தில் இருந்த தொல்லைகள் அகலும். மனதில் இருந்து வந்த பயங்கள் தீரும்.

# நாட்டை நேசிப்பவர்கள் சிந்திக்கவேண்டிய தருணம்!

## மங்கள வலியுறுத்து



**கொழும்பு, டிசெ.8**

**ஒரு நாடு, ஒரு சட்டம் என்பதை, வெறும் வார்த்தைகளுக்கு அப்பால் சென்று, உண்மையில் நடைமுறைப்படுத்துவது எப்படி என நாட்டை நேசிப்பவர்கள் சிந்திக்க வேண்டிய தருணம் வந்துள்ளது என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர வலியுறுத்தியுள்ளார்.**

சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள காணொளியில் முன்னாள் அமைச்சர் மங்கள மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மஹர சிறைச்சாலை கலவரத்தின் பின்னர் சிறைச்சாலை வாசலில், தென்பகுதியில் கண்ணீர் விட்ட தாய்மார்களை முன்னாள் அமைச்சர் மங்கள நினைவுபடுத்தினார்.

அத்துடன் நாங்கள் தென்பகுதி தாய்மார்களின் கண்ணீரை மாத்திரமில்லை; அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட தாய்மார்களின் கண்ணீரையும் பார்த்துள்ளோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கொலை செய்யப்படுபவர்கள் எங்களின் தேசத்தின் பிள்ளைகள். தென்பகுதியில் கொல்லப்பட்ட சிங்களவர்கள், வடபகுதியில் கொல்லப்பட்ட தமிழர்கள் மஹர சிறைச்சாலையில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் 2012ஆம் ஆண்டு வெலிக்கடையில் கொல்லப்பட்டவர்கள் அனைவருமே எங்களின் பிள்ளைகள். எங்கள் நாட்டின் பிள்ளைகள் என்பதை நாங்கள் மறக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

## அனில் ஜாசிங்கவின் நியமனத்துக்கு அனுமதி

கொழும்பு, டிசெ.8



உயர் பதவிகளுக்கான நாடாளுமன்றக்குழு சுற்றாடல் துறை அமைச்சின் செயலாளராக விசேட மருத் துவ நிபுணர் அனில் ஜாசிங்கவை நியமிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

இதேவேளை, 4 அமைச்சு செயலாளர்களின் பதவிகளுக்கும், ஒரு தூதுவர் பதவிக்கும் ஆன அங்கீகாரத்தையும் இந்த நாடாளுமன்ற உயர் பதவிகளுக்கான குழு, நேற்று வழங்கியுள்ளது.

இதன்படி நீர் விநியோக அமைச்சின் செயலாளராக ப்ரியாத் பந்து விக்ரம, உயர்கல்வி அமைச்சின் செயலாளராக கபில பெரேரா, நீதியமைச்சின் செயலாளராக எம்.பி.கே. மாயாதுன்ன ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர். (ற-இ)

## தான நிகழ்வுக்குச் சென்ற தேரர்களுக்கு கொரோனா

கம்பளை, டிசெ.8

கம்பளை கொஸ்கம பிரதேசத்தில் தான நிகழ்வுக்குச் சென்ற தேரர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதால் மூன்று விகாரைகள் மூடப்பட்டுள்ளன.

கடந்த 19 ஆம் திகதி ஆத்ம சாந்தி கிரியைகள் நடைபெற்று தானம் வழங்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வுக்கு அத்துகொட, ஹெரகொல்ல, அலாகம ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள விகாரைகளின் தேரர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இவர்களில் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு 12 நாள்களின் பின்னரே, பிரதேசத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார அதிகாரிகள் அவர்களைத் தனிமைப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# ஜனவரி முதல் நடைமுறையில் விசேட போக்குவரத்து திட்டம்

## *போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.8

பாக் அன்ட் ரைட் (Park & Ride) எனப்படும் தனிப்பட்ட வாகனப் பயன்பாட்டைக் குறைக்கும் வகையிலான போக்குவரத்து திட்டம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அத்துடன், பேருந்துகளுக்கான இலத்திரனியல் பயணச்சீட்டு வழங்கும் செயற்றிட்டமும் குறித்த தினத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன்படி, 'பாக் அன்ட் ரைட்' போக்குவரத்து செயற்றிட்டத்தின் முதலா



வது கட்டம், மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து மத்திய நிலையத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் மூலம், கொழும்பு நகருக்குள் வருகை தரும் வாகனங்களின் எண்ணிக்கையை கணிசமான அளவில் கட்டுப்படுத்த முடியும்.

அத்துடன், சொந்த வாகனங்களில் வருகை தருபவர்கள், மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து மத்திய நிலையத்தில் தமது வாகனங்களை நிறுத்திவிட்டு, சொகுசு பேருந்துகளின் மூலம் கொழும்புக்கு வருகை தர முடியும். மேலும், 15 நிமிடங்களுக்கு ஒரு தடவை என்ற அடிப்படையில் சொகுசு பேருந்துகள் இயக்கப்படும். இந்த பேருந்துகளில் 'வைபை' (wifi) மற்றும் 'ஜிபிஎஸ்' (GPS) கண்காணிப்பு வசதி ஆகியன காணப்படுகின்றன.

பணப் பயன்பாட்டைக் குறைக்கும் வகையில், இலத்திரனியல் பயணச் சீட்டு வழங்கும் செயற்றிட்டமும் ஆரம்பிக்கப்படவுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ந-இ)

# பண்டிகை காலத்திலும் முடக்கும் திட்டம் இல்லை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.8

**பண்டிகைக் காலத்தில் மேல் மாகாணத்தை முடக்கும் திட்டம் இல்லை. பதிலாக நோயாளிகள் அடையாளம் காணப்படும் பகுதிகள் மட்டும் தனிமைப்படுத்தப்படும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கொழும்பில் உள்ள மக்கள் தனிமைப்படுத்தல் பற்றி அச்சமடையத் தேவையில்லை. மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்க வேண்டும்.

நிலைமை கட்டுப்பாட்டில் இல்லை என்றாலும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுப்பதே எப்போதும் நல்லது. பண்டிகை காலத்துக்கு இன்னும் சில நாள்களே உள்ள நிலையில் அடுத்த வாரம் நிலைமை மீளாய்வு செய்யப்பட்டு மேலதிக சுகாதார வழிகாட்டுதல்களை அமுல்படுத்த வேண்டுமா என்பது பற்றி விவாதிக்கப்ப டும் -என்றார். (வ-இ)


# பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினராக சிவஞானசோதி

கொழும்பு, டிசெ.8

பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவராக அமைச்சின் முன்னாள் செயலாளர் வே.சிவஞானசோதி நியமிக்கப்பட்டுள்ளார்.

சுயாதீன பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு நாடாளுமன்ற சபையின் ஒப்புதல் பெறப்பட்டது. அதன்படி, ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஜகத் பாலபட்டபெண்டியும், அமைச்சின் முன்னாள் செயலாளர்களான திருமதி. இந்திராணி சுகத்தாஸ், வே. சிவ ஞானசோதி ஆகியோரும் கலாநிதி.ரீ.ஆர்.சி.ருபேரு, லியனகம, டியன் கோமஸ், டபிள்யு.எஸ்.பியதாச, டிலித் ஜயவீர, ஏ.எல்.எம் சலீம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர் .

சிரேஷ்ட அரச அலுவலர் வே.சிவஞான சோதி கடந்த வருடங்களாக பல்வேறு அமைச்சுக்களில் செயலாளராக கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)



# ஆபரணக் கைத்தொழிலுக்கு இலங்கை கைவினைஞர்கள்

## உதவி நாடும் தென்னாபிரிக்கா

கொழும்பு, டிசெ.8

தென்னாபிரிக்காவில் ஆபரணத் தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை கைவினை கலைஞர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்ள தென்னாபிரிக்க அரசாங்கம் ஆர்வமாக உள்ளது.

கொழும்பிலிருந்து வெளிச்செல்லும் தென்னாபிரிக்க உயர் ஸ்தானிகர் ரொபினா பி. மார்க்ஸ் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவை அண்மையில் சந்தித்திருந்தார். இதன்போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் தொழில்நுட்ப இடைவெளிகளால் அறுவடையில் 40வீதமானவை வீணடிக்கப்படு வதைத் தடுக்க, இலங்கையில் உணவு மற்றும் மரக்கறித் தொழிலுக்கான பதப்படுத்தல் தொழில் துறையில் தென்னாபிரிக்காவின் நிபுணத்து வத்தை அமைச்சர் குணவர்தன சந்திப்பின்போது கோரியுள்ளார். (வ-இ)

# கண்டி நில அதிர்வு : 3 நாள்களில் அறிக்கை

கொழும்பு, டிசெ.8

கண்டியில் அண்மையில் பல இடங்களில் ஏற்பட்ட நில அதிர்வுகள் தொடர்பான அறிக்கையை புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கத் தொழில் பணிமனையின் நிபுணர்கள் குழு தயாரித்து வருகிறது.

இந்த அறிக்கை எதிர்வரும் 3 தினங்களுக்குள் முன்வைக்கப்படும் என அதன் பணிப்பாளர் நாயகம் டி.சஜ்ஜன டி சில்வா தெரிவித்துள்ளார். கண்டி - திகன பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறிய அளவான நில நடுக்கமொன்று பதிவாகியுள்ளது.

இந்த நில நடுக்கம், ரிக்டர் மானியில் 2 மெக்னிரியூட் அளவில் பதிவானது என புவிசரிதவியல் மற்றும் சுரங்கத் தொழில் பணிமனை தெரிவித்துள்ளது. (ந-இ)

# லொத்தர் சீட்டுக்களுக்கு மில்லி. கணக்கில் செலவு

## கோப் குழு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.8

தேசிய லொத்தர் சபை 2016 முதல் 2019 வரை லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு மில்லியன் கணக்கில் செலவிட்டுள்ளது என்று கோப் குழு தெரிவித்துள்ளது.

அதன்படி 2016 ஆம் ஆண்டு 609 மில்லியனும், 2017 ஆம் ஆண்டு 453 மில்லியனும், 2018 ஆம் ஆண்டு 506 மில்லியனும், 2019 ஆம் ஆண்டு 530 மில்லியனும் இவ்வாறு செலவிடப்பட்டுள்ளன.

எனவே, நிறுவனத்தின் கொள்முதல் செயல்முறை மிகவும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் லொத்தர் சீட்டுகளை அச்சிடும் செயல்முறையை முறையாக ஒழுங்குபடுத்த வேண்டும் என்றும் கோப் குழு பரிந்துரைத்தது. (ந-இ)

# நங்கூரமிடும் தளத்துக்கான கட்டுமானப் பணி ஆரம்பம்

அம்பாந்தோட்டை, டிசெ.8

மாவெல்ல நங்கூரமிடும் தளத்துக்கான கட்டுமானப் பணிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நங்கூரமிடும் தளத்தில் 260 மீற்றர் நீளமான உள்நுழையும் கால்வாயொன்று கப்பல் போக்குவரத்தை இலகுவாக்கும் நோக்கில் அமைக்கப்படவுள்ளது. இந்தத் திட்டம் மீனவர் மற்றும் மீனவ குடும்பங்களுக்கு பாதுகாப்பான தொழில்முறை மட்டத்தை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நங்கூரத்தை நிர்மாணிப்பதன் மூலம் ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட மக்களுக்கு வாழ்வாதாரம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். 380.07 மில்லியன் ரூபா செலவிலான இந்த திட்டத்தை 15 மாத காலப்பகுதிக்குள் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது. (வ-இ)



# சகோதரனை குத்திக் கொன்ற சகோதரி!!

கொழும்பு, டிசெ.8

பண்டாரகம - அட்டுலுகம பகுதியிலுள்ள தனிமைப்படுத்தப்பட்ட வீடொன்றில் ஆணொருவர் சொந்த சகோதரியாலேயே குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு 31 வயதான ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இந்தக் கொலைக்கான காரணம் என்று விசாரணைகளின் ஊடாகத் தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேல திக விசாரணைகளை பண்டாரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-இ)

# நாவலப்பிட்டியில் யுவதிக்கு தொற்று

ஹற்றன்,டிசெ.8

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெட்டபுலா மத்திய பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 25 வயதுடைய யுவதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் பணிபுரிந்த இவர் கடந்த 25 ஆம் திகதி வீடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதையடுத்து அவர் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-இ)

# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 23,304 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, இதுவரை 23 ஆயிரத்து 304 குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆயிரத்து 570 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என் சூரியராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 2008 ஆம் ஆண்டு நிஷா புயலால் ஏற்பட்ட தாக்கத்தின் பின்னர், தற்போது வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தின் காரணமாக யாழ். மாவட்டத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

புரேவித் தாக்கம் மற்றும் தொடர்ச்சியான சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை 23 ஆயிரத்து 304 குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆயிரத்து 570 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இருவர் உயிரிழந்துள்ளனர். ஆறு பேர் காயமடைந்துள்ளனர். அதேவேளை 94 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. 3 ஆயிரத்து 24 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் சிறு மற்றும் மத்திய முயற்சியாளர்கள் 776 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 27 வகையான உட்கட்டமைப்பு வசதிகளும் சேதமடைந்துள்ளன. தற்போது 21 இடைத் தங்கல் முகாம்களில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். என்றார். (க-111)

## மின்மோட்டர் திருட்டு

சாவகச்சேரி, டிசெ. 8

வீட்டில் பொருத்தப்பட்டிருந்த மின்மோட்டர் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு பளை இந்திராபுரத்தில் இடம்பெற்றது. இப் பகுதியில் மீளக்குடியமர்ந்த ஒரு சில குடியிருப்புகளுக்கு மின்சார விநியோகம் அண்மையில் வழங்கப்பட்டது.

புதன்கிழமை புதிதாக 32 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்த மின்மோட்டர் வளவுக்குள் ஏற்கனவே உள்ள குழாய்க் கிணற்றுக்கு அருகில் பொருத்தப்பட்டிருந்தது. வெள்ளிக்கிழமை இரவு பெருமழை பெய்தது. மறுநாள் காலையில் பார்த்தபோது மின்மோட்டர் பொருத்தப்பட்டிருந்த ஆணிகளை வாள்பிளேட்டினால் அறுத்து திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (ஐ-9)

## உதவிப் பணம் அனுப்பி வைப்பு

சாவகச்சேரி,டிசெ.8

தென்மராட்சி பிரதேச அஞ்சல் அலுவலகங்களில், பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான டிசம்பர் மாதக் கொடுப்பனவுகள் பிரதேச சமூக சேவைகள் அலகினரால் நேற்று அனுப்பப்பட்டுள்ளன.

கொடுப்பனவை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## பெண் கைதிகளை தனிமைப்படுத்த போகம்பர மத்திய சிறைச்சாலை!

கொழும்பு, டிசெ. 8

கொரோனாத் தொற்றுக்குள்ளான கைதிகளை தனிமைப்படுத்தும் மத்திய நிலையமாக மாற்றப்பட்ட போகம்பர பழைய சிறைச்சாலை, பெண் கைதிகளுக்கான தனிமைப்படுத்தல் மத்திய நிலையமாக மாற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நேற்றையதினம் கந்தகாடு கொரோனா சிகிச்சை மத்திய நிலையத்தில் சிகிச்சைபெற்று குணமடைந்த 663 பெண் கைதிகள் போகம்பர சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அத்துடன், போகம்பர பழைய சிறையில் தனிமைப்படுத்தப்பட்ட 322 ஆண் கைதிகள், ஆனைமிறவு இராணுவ கொரோனா சிகிச்சை நிலையம், மற்றும் மகசின் சிறை ஆகியவற்றுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுங்கள்

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மன்.மாவட்டச் செயலர் வேண்டுகோள்



மன்னார், டிசெ.8

மன்னாரில் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களில், மக்களால் இனம் காட்டப்படுகின்ற வற்றுக்கே முக்கியத்துவப்படுத்தி அவற்றுக்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி களுக்கான கூட்டம் மாவட்டச் செயலகத்தில் கடந்த வார இறுதியில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரச சார்பற்ற நிறுவனங்கள் மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளன.

அரச நிதியுடன் அரச சார்பற்ற நிதியையும் கொண்டே உரிய காலத்தில் இப் பகுதியிலுள்ள மக்களை நாம் பராமரிக்கக் கூடியதாக இருந்தது.

நீண்டகாலமாக பல அதிகாரிகள் இப் பகுதியில் பணியாற்றிக் கொண்டு இருக்கின்றீர்கள். அத்துடன் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் இருக்கின்றீர்கள். மன்னார் மாவட்ட மக்களின் தேவைகளை நன்கு அறிந்தவர்களாகவும் இருக்கின்றீர்கள். இந்த நிலையில் நீங்கள் உங்கள் வருடாந்த திட்டங்களைத் தயாரிக்கும்போது நீங்கள் அப்பகுதி மக்களுடன் நன்கு ஆராய்ந்து அவர்களால் முன்னுரிமைப்படுத்தப்பட்ட தேவைகளை இனம் கண்டு செயல் வடிவம் கொடுக்க வேண்டும் - என்றார். (ஐ-60)

## புரேவி புயல் தாக்கத்தால் நெடுந்தீவிலும் அழிவுகள்

நெடுந்தீவு, டிசெ. 8

நெடுந்தீவு பிரதேசம் அசாதாரண சூழ்நிலை யால் கடுமையான அழிவைச் சந்தித்துள்ளது என நெடுந்தீவு மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் பத்திமாதாஸன் லீலியான்குருஸ் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் அப்பிரதேசத்திற்கான படகுப் பயணங்களும் நிறுத்தப்பட்டு ள் என எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் தொடரும் மழை காலநிலையால் மீனவப் படகுகள் பல சேதமடைந்ததோடு, கரையோரங்கள் கடுமையான அரிப்புக்கு உள்ளாகியுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

மீனவர்களின் படகுகள் கரைகளில் உள்ள கற்பாறைகளுடன் மோதுண்டு மிகக் கடுமையான சேதங்களைச் சந்தித்துள்ளன. படகுகளை பாதுகாப்பாகக் கட்டுவதற்கும் பாதுகாப்பு அணை வாண் இல்லாமை, இம் மீன வர்களது வாழ்வாதார முதலீடுகள் அழிக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த புரேவி சூறாவழியால் நெடுந்தீவு ஜே 1 தொடக்கம் ஜே 6 வரையான கிராம அலுவலர் பிரிவுகளிலும் 112 மீனவக் குடும்பங்களின் படகுகள் , இயந்திரம், தெப்பம், வலை,களஞ்கட்டி என்பன அழிவடைந்ததால் மீனவர்கள் பல இலட்சம் ரூபா பெறுமதியான அழிவைச் சந்தித்துள்ளனர். அங்கு 829 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கரையோரங்கள் பாரியளவில் சேதம் அடைந்துள்ளன என்றும் நெடுந்தீவு பிரதேச செயலர்சத்தியசோதி தெரிவித்துள்ளார். (ப)

## கொடிகாமம் சமுர்த்தி வங்கி தற்காலிகமாக இடமாற்றம்

சாவகச்சேரி,டிசெ.8

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகின் கொடிகாமம் வங்கி தற்காலிகமாக வேறு இடத்துக்கு மாற்ற மாவட்ட பணிப்பாளர் பணித்துள்ளார். புரேவிப் புயல் மற்றும், தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக வங்கி இயங்கும் கட்டடத்தைச் சுற்றியும் வங்கிக்குச் செல்லும் வீதியிலும் வெள்ளம் நிறைந்து காணப்படுகிறது.

அங்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட மாவட்டப் பணிப்பாளர் வங்கியின் செயற்பாடுகளை தற்காலிகமாக வேறு இடத்துக்கு மாற்றி செயற்படுமாறு பிரதேச தலைமைப்பீட முகாமையாளரைப் பணித்துள்ளார்.

கொடிகாமம் - கச்சாய் வீதியில் அமைந்துள்ள வங்கிக் கட்டடம் [illegible] இடத்துக்கு மாற்று[illegible] கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்[illegible] என என்று தெரிவி[illegible] பட்டது.



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் ஆறுமுக நாவலர் குருபூசை நேற்று நடைபெற்றது. கலாசாலை நுழைவாயிலில் உள்ள ஆறுமுக நாவலர் திருவுருவச் சிலைக்கான வழிபாட்டுடன் நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றது. (ஐ)

## இரத்தினக்கல்லை விற்க இரத்தினபுரியில் தடை

இரத்தினபுரி நகரில் இரத்தினக்கல் விற்பனை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பேருவளை பகுதியிலிருந்து இரத்தினபுரிக்கு, இரத்தினக்கல் விற்பனைக்காக வருகை தந்த ஒருவருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில், அவருக்கு கொவிட் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்தே, இரத்தினபுரி நகரில் இரத்தினக்கல் விற்பனைக்கு தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி நகர முதுவலர் டிரோன் அத்தநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். இரத்தினக்கல் விற்பனை ஆரம்பிக்கப்படும் திகதி விரைவில் அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ப)

# தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு அரசு முழுமையாக உதவவில்லை

எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.8
கொரோனா அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் சேவை முழுமையாக சென்றடையவில்லை என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தால் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன.

ஆனால், குறித்த பொருள்கள் 7ஆயிரம் ரூபா பெறுமதியானதாகவே காணப்பட்டன. அரசாங்கத்தின் குறித்த சேவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் சென்றடையவில்லை.

பொருள்களாக மக்களுக்கு வழங்காமல் மாறாக ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 10ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தால் சிறந்ததாக இருந்திருக்கும் - என்றார். (ஐ-இ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 2016 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சி,டிசெ.8
கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர் மழையால் இதுவரை 2 ஆயிரத்து 16 குடும்பங்களைச் சேர்ந்த, 5 ஆயிரத்து 807 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலகம் தகவல் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் மழையால், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. அதனால் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இரணைதீவில் தங்கியுள்ள மக்களுக்கு கடற்படையினரின் உதவியுடன் உணவுகள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 9 மணி வரை திரட்டப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில், 3 வீடுகள் முழுமையாகவும், 277 வீடுகள் பகுதி அளவிலும் சேதம் அடைந்துள்ளன. அதேவேளை 2 பாதுகாப்பு அமைவிடங்களில் 88 குடும்பங்களைச் சேர்ந்த 134 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 658 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 31 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 39 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 249 குடும்பங்களைச் சேர்ந்த 676 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 7 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 810 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 117 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 வீடுகள் முழுமையாகவும், 197 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இரணை தீவில் சிக்கியுள்ள 88 குடும்பங்களைச் சேர்ந்த 134 பேர் தொடர்ந்தும், 2 பாதுகாப்பு அமைவிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 299 குடும்பங்களைச் சேர்ந்த 983 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 34 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகள் அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (க-6)



## கர்ப்பிணிகளுக்கு உதவித் திட்டங்கள்

கிளிநொச்சி, டிசெ.8
பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் ஆரோக்கியமான பிறப்பு வீதத்தை மேம்படுத்தும் வகையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

இவ் உதவித் திட்டத்துக்காக பிரதேச சபையால் ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு, நேற்று முதற்கட்டமாக உப தவிசாளர் முத்துக்குமார் கஜனால் வழங்கப்பட்டது. (ஐ-6)

கடும் வெள்ளத்தால்

## இந்திய வீடுகளின் அத்திபாரம் அரிப்பு

கிளி. பொன்நகர் மத்தியில் சம்பவம்

கிளிநொச்சி, டிசெ. 8
கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் பெய்த கனமழை காரணமாக கரைச்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பொன்நகர் மத்தி 72 இந்தியன் வீட்டுத்திட்ட பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால், அத்திபாரங்கள் அரிக்கப்பட்டுள்ளன என்று பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டினர். இதனால் தாம் அச்சத்தின் மத்தியில் இவ் வீடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது;
கன மழை காரணமாக எமது குடியிருப்புகளில் வெள்ள நீர் வழிந்து ஓடிக் கொண்டிருந்தது. இவ்வாறான சூழ்நிலையில் எமது வீடுகளின் அத்திபாரம் அரிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் இவ்வாறான வெள்ளம் ஏற்பட்டு சிறிய அளவு அரிப்பு ஏற்பட்டு இருந்தது. அவ்வாறு இருக்கும்போது நேற்றுமுன்தினம் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பாரியளவு அரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் வீடுகளின் சுவர்களில் பாரிய அளவு வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. வீடுகளில் நாம் தொடர்ந்து வசிப்பது எமக்கு பாதுகாப்பு அற்றதாகவே உள்ளது. இவ்வாறான பாதிப்புகளை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொண்டு சீர் செய்துதரவேண்டும் என்றனர். (ஐ-6)

## தேசியப் பட்டியல் ஆசனம் யாருக்கு?

கொழும்பு,டிசெ.8
எமது மக்கள் சக்திக்கு கிடைத்துள்ள தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் இறுதிக் கலந்துரையாடல் இன்று இடம்பெறும் என்று எமது மக்கள் சக்தியின் தலைவர் சமன் பெரேரா தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் சமன் பெரேரா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரதன தேரர் மற்றும் கலகொட அத்தே ஞானசார தேரர் ஆகியோர் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமையும் இடம்பெற்றது. அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியும் தமக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் இதுவரையில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளவில்லை.

கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் கையொப்பமிட்ட ஆவணத்தை அண்மையில் கையளித்து, கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றுக்குச் செல்லுமாறு அழைப்பு விடுத்த போதிலும், அவர் அதனை நிராகரித்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## மௌலானாவின் இராஜினாமா: அதி உயர் பீடம் கூடி ஆராயும்

ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.8
முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான அலி சாஹிர் மௌலானா தனது பதவி விலகல் கடிதத்தில் தெரிவித்துள்ள விடயங்கள் நியாயமானவை. அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்த எம்.பிகள் தொடர்பில் கட்சி உயர்மட்டக் குழுவும் அதிஉயர் பீடமும் கூடி இறுதி முடிவு எடுக்கும். இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அலி சாஹிர் மௌலானாவின் கடிதம் கிடைத்துள்ளது. நியாயமான விடயங்களை அவர் முன்வைத்துள்ளார். கட்சி நலனுக்காக சில முடிவுகள் எடுத்திருந்தோம். அரசுக்கு ஆதரவு வழங்கிய எம்.பிகள் தொடர்பில் ஆராய உயர்மட்டக் குழுவும் அதி உயர் பீடமும் கூடி ஆராய்ந்து அடுத்த கட்ட முடிவு குறித்து தீர்மானிக்கும் என்று ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (ப)



## சாவகச்சேரியில் 70 பேருக்கு பி.சி.ஆர்.

சாவகச்சேரி,டிசெ.8
சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று நடமாடும் எழுந்தமான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி நுணாவில் கிழக்கில் இயங்கும் சியாரா தனியார் கட்டட நிர்மாண அலுவலக பணியாளர்கள் மற்றும் கைதடி ,நாவற்குழி, மட்டுவில் ஆகிய இடங்களில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் என 70 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பெறப்பட்ட மாதிரிகளில் எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ-9)

# முல்லைத்தீவு சுகாதாரப் பணிப்பாளராக மருத்துவர் உமாசங்கர் கடமையேற்றார்

முல்லைத்தீவு, டிசெ. 8

**முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் மு.உமாசங்கர் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றார்.**




வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அனுப்பிய கடிதத்துக்கு அமைவாக அவர் கடமைகளை ஏற்றார்.

மருத்துவர் உமாசங்கர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவ நிர்வாகத் துறையில் பட்ட மேற்படிப்பை பூர்த்தி செய்து வெளிநாட்டு மேற்படிப்பை சிங்கப்பூரில் முடித்து கடந்த மாதம் நாடு திரும்பியிருந்தார்.

இவர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் முன்னாள் அத்தியட்சகராகவும் கடமை புரிந்துள்ளார். (த-இ)

# கழக உறுப்பினர்களின் நினைவேந்தல்



வவுனியா, டிசெ. 8

2001 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட வவுனியா யங்ஸ்டார்ஸ் விளையாட்டு கழகத்தின் உறுப்பினர்களான சாந்தன், ஜூட்சன் ஆகியோரின் 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி வவுனியா வைரவ புளியங்குளத்தில் நேற்று நடைபெற்றது.

விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு, ஒளிதீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன், நகரசபை உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கம், சமூக ஆர்வலர்களான சந்திரகுமார் கண்ணன், கண்ணகி தேவராசா மற்றும் கழகத்தின் உறுப்பினர்கள் இளைஞர்கள், எனப் பலர் கலந்துகொண்டனர். (த 110)

# ஷானிக்கு பிணை வழங்குவதா நீதிமன்று நாளை கட்டளை

கொழும்பு, டிசெ. 8

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவுக்கு பிணையளிப்பதா ? இல்லையா? என்பது பற்றிய கட்டளையை நீதிமன்று நாளை புதன்கிழமை பிறப்பிக்கவுள்ளது.

இந்தக் கட்டளை நீதிமன்றில் நேற்று அறிவிக்கப்படவிருந்த நிலையில் நீதிபதி விடுமுறையில் உள்ளார் என்று அறிவிக்கப்பட்டதோடு, எதிர்வரும் 9ஆம் திகதி கட்டளை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[illegible]

நாளை அறிவிக்கப்படவுள்ளது. (அ-இ)

## பொது அறிவித்தல் - 2021
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | ஆதனவரி | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 2021ம் ஆண்டுக்கான ஆதனவரி சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களுக்கான மீள்மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த பெறுமதியின் 14% ஆகவும் ஏழாலை உப அலுவலகத்திற்கான ஆதனவரி வருடாந்த பெறுமதியின் 15% ஆகவும் அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2021ம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2021ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்தவரியில் 10% கழிவினைக் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டுற்குமுரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டுவரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியை செலுத்ததவறின் விறாந்துக்கட்டணமாக வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதனவரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதனவரிகளை 31.01.2021ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 02 | ஆதனப்பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள் | பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். |
| 03 | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டத்தின் கீழ் கட்டட அனுமதிவழங்கல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரசதனியார் நிறுவனங்கள் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள், முட்கம்பித்தூண் அமைப்பதாயின் அல்லது பழையகட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேசசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதிபெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும்<br>2. புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒருவருடகாலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரியகட்டணம் செலுத்திகட்டட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. அத்துடன் கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டதும் பிரதேசசபை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு படிவங்களைப்பெற்று பூர்த்திசெய்து உரியகட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்றுஅமைத்தல் வேண்டும்.<br>5. அனுமதியற்ற கட்டடங்களை முறைப்படுத்தி சீர்செய்கை நடவடிக்கைக்கான தண்டப்பணம் 1597/8 ஆம் இலக்க 2009.04.17 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அதிவிசேஷ வர்த்தமானப்பத்திரிகை பகுதி I' தொகுதி (I) பொது அட்டவணை V இன் மேவுதல் அங்கீகாரங்கள் பிரகாரம் அறவீடுசெய்யப்படும்<br>போக்குப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர அலங்கார அமைப்புக்கள் அமைத்தல் முற்றாகதடைசெய்யப்பட்டுள்ளது. |
| 04 | காணி உப பிரிவிடுகை | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதிபெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 05 | சூழல் பாதுகாப்பு உரிமம் | தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000ஆம் அண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159/22ஆம் இலக்க அதிவிசேடவர்த்தமானியில் "இ"பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபாரநடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பபடிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரியகட்டணத்தைச் செலுத்திசூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். |
| 06 | வியாபார அனுமதிப்பத்திரம் 2021 | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை உடுவில், சுன்னாகம், ஏழாலை ஆகிய உப அலுவலகங்களில் 2021ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்திஉரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2021 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளவும். 31.03.2021ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீதுசட்டநடவடிக்கை எடுக்கப்படும். |
| 07 | துவிச்சக்கரவண்டி உரிமம் | துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் | துவிச்சக்கரவண்டிகள் வைத்திருப்போர் 2021.03.31 ஆம் திகதிக்குமுன் உரிய உப அலுவலகங்களில் உரியகட்டணங்களை செலுத்தி 2021ம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும். |
| 08 | மிருகங்களுக்கான உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | வளர்ப்புநாய்கள் வைத்திருப்போர் 2021.03.31ஆம் திகதிக்குமுன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி பதிவுசெய்து 2021 ஆம் ஆண்டுக்கான மிருகஉரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும் |
| 09 | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள் | பிரதேசசபைஎல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்குபிரதேசசபையின் அனுமதியைப் பெற்றேவிளம்பரங்களைக் காட்சிப்படுத்தவேண்டும். அனுமதிபெறப்படாதவிளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். கட்டணவிபரம் பின்வருமாறு |
| 10 | வீதிஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள் | வீதி ஒழுங்கைப்பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனைசெய்வது, காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தகநிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, முட்டை என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 12 | பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையங்கள் | உணவுகையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதிபெற்றிருத்தல் வேண்டும்.<br>2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனைதடைசெய்யப்பட்டுள்ளது. |
| 13 | பொது இடங்களில் கழிவுபோடுதலும் டெங்கு, நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும் | பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் | திண்மக்கழிவுகளை பிரதேசசபைக்கு ஒப்படைக்கும்போது அவை தரம்பிரித்து வழங்கப்பட வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் முற்றாக தடைசெய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை -வைத்திருப்போர் மீதும் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்<br>அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்படல் வேண்டும்<br>பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் பூமரங்கள் நாட்டுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 14 | படவரைஞர்களை பதிவு செய்தல் | படவரைஞர்கள் | 2021ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்துள்ளவர்களும் 2021ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும்/புதுப்பித்துக்கொள்ளவும் மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலகநேரத்தில் தொடர்புகொள்ளவும். |
| 15 | தரகர் முறைநீக்கல் | சந்தைக் குத்தகையாளர்கள் | எமது பிரதேச சபைஎல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக்குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர். |


(09 - கட்டணவிபரம்)

| தொ. இல | விபரம் | கட்டணம் (1சதுர அடி) |
|---|---|---|
| 1 | சுவர் ஒன்றில் அல்லது மதில் ஒன்றில், பலகை ஒன்றில் அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் (தகரம்,பிலெக்ஸ்,லூமினஸ்) அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் காட்சிக்கு வைக்கப்படுகின்ற நிரந்தர விளம்பர அறிவித்தல் | 100-00 |
| 2 | ஒருமாதத்திற்கு மேல் 03 மாதங்களுக்கு குறைவான காலஎல்லைக்கு காட்சிக்குவைக்கப்படுகின்ற பதாகை | 30 00 |
| 3 | ஒரு மாதத்திற்கு அல்லது அதற்கு குறைவாகக்காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை | 20 00 |
| .4 | கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு கூடுதலான கால எல்லை | 40 00 |
| 5 | கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லை | 20 00 |
| 6 | வர்த்தகநிலையங்களுக்குள் காட்சிக்கு வைக்கப்படுகின்ற தனது வர்த்தகநாமத்தை உடைய வர்த்தகபெயர்பலகை தவிர்ந்த வேறு பெயர்ப்பலகை | 100.00 |
| 7 | டிஜிடல் பெயர்ப்பலகை | 150 00 |
| 8 | ஒளிபுக கூடியவிளம்பரம் | 150 00 |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில்புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்டநடவடிக்கைமேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தவிசாளர்
வலிகாமம் தெற்குபிரதேசசபை,
சுன்னாகம்.
0212240017/0212244045

## மரண அறிவித்தல்



தோற்றம் • 22 • 01 • 1942

மறைவு • 07 • 12 • 2020

### கோமதி ஆனந்தன் சரபாலகிருஷ்ணன்

( பாலன் ஆசாரி )

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வவுனியா தெற்பிலிப்பைக்குளம், 2 ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கோமதி ஆனந்தன் சரபாலகிருஷ்ணன் ( பாலன் ஆசாரி ) அவர்கள் நேற்று (07.12.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோமதி ஆனந்தன் ஆசாரி பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கமலம் மணி ஆகியோரின் அன்பு சகோதரரும் ரமேஸ்குமார் ( ஜேர்மன் ) சாந்தி ஆகியோரின் அன்பு தந்தையும் சாந்தி ( ஜேர்மன் ) சசிக்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் டிலக்சி, பாலகணேஸ், கிஷோர் ( ஜேர்மன் ) விதர்சா, கினிதா, விதுர்சன் ( கோவில்குளம் இந்துக்கல்லூரி ) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 08.12.2020 ) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .

இந் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் ஒழுங்கை,
தெற்பிலிப்பைக்குளம் , வவுனியா

**தகவல்:**
சதீஸ் ( பெறாமகள் )
0774933604

கொரோனாவின் நீண்டகால விளைவு:

# வறுமையின் பிடியில் 20 கோடி மக்கள்

### எதிர்வுகூறுகிறது ஐ.நா

நியூயோர்க், டிசெ. 8

கொரோனாத் தொற்றின் நீண்டகால விளைவுகள், 20 கோடியே 70 லட்சம் பேரை கடுமையான வறுமை நிலைக்குத் தள்ளும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஐ.நா வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2030 ஆம் ஆண்டுக்குள் வறுமையில் வாழ்வோர் எண்ணிக்கை 100 கோடிக்கும் அதிகமாக இருக்கும். கொரோனாவால் தூண்டப்பட்ட பொருளாதார நெருக்கடியின் 80 சதவீதம், உற்பத்தித்திறன் இழப்பு காரணமாக 10 ஆண்டுகளுக்கு நீடிக்கும்.

உலகத் தலைவர்கள் எடுக்கும் முடிவுகள், உலகை மிகவும் மாறுபட்ட திசைகளில் கொண்டு செல்லக் கூடும். நிலைபேறான வளர்ச்சி இலக்குகள், 14 கோடியே 60 லட்சம் பேரை தீவிர வறுமையில் இருந்து வெளியேற்றும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# பிராஸர் தீவில் தீ: மக்கள் வெளியே!



கான்பாரா, டிசெ. 8

ஆஸ்திரேலியாவில் பிராஸர் தீவில் பரவி வரும் காட்டுத் தீ காரணமாக அந்த தீவிலுள்ளவர்களை வெளியேறுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த ஆறு வாரங்களாக, தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்படுத்த போராடி வருகின்றனர். இருப்பினும் தொடர்ச்சியான வெப்ப அலை மற்றும் கடும் வரட்சியால் முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன. ஒக்ரோபர் நடுப்பகுதியில் சட்ட விரோதமாக தீ மூட்டப்பட்டமையால் காடுகள் தீப்பிடித்துள்ளன. தீவின் பாதிக்கும் மேலான பகுதிகள் அதாவது சுமார் 83 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பகுதி எரிந்து சாம்பலாகியுள்ளது. பிராஸர் தீவு குயின்ஸ்லாந்து கடற்கரையில் ஒரு பிரபலமான சுற்றுலா தளமாகும். இது உலகின் மிகப்பெரிய மணல் தீவாகும், இது யுனெஸ்கோவால் உலக பாரம்பரிய தளமாக பட்டியலிடப்பட்டுள்ளது. (வ-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் • 24 • 11 • 1947

மறைவு • 07 • 12 • 2020

### திருமதி செல்வநாயகம் அன்னலட்சுமி

இரத்தினபுரி பலாங்கொடையை பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டியை வதிவிடமாகவும், தற்போது யாழ் பிறவுண் வீதி, நீராவியடியில் வசித்து வந்தவருமான செல்வநாயகம் அன்னலட்சுமி நேற்று (07.12.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை- வேலாயின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை- பொன்னம்மாவின் மருமகளும், காலஞ்சென்ற சபேசன், சகிலன் (லண்டன்) சர்மிளா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குலமாறன் (கனடா) எஸ்தர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கார்த்தி, கஷ்வின், சாகிஷ், சோபியா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற மருதப்பன், மருதாய், முத்து, குருவம்மா, சண்முகம், காலஞ்சென்ற மகேஷ் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற இராஜதுரை, இராசேந்திரம், செல்வராணி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.12.2020 புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 65, பிறவுண் வீதி, நீராவியடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

| | | |
|---|---|---|
| செல்வநாயகம் | - கணவர் | 077 953 0929 |
| சகிலன் | - மகன் | 00447414514189 |
| சர்மிளா | - மகள் | 0016472142403 |
| லகின்சன் | - | 077 990 7173 |

## மரண அறிவித்தல்



மலர்வு • 26 • 01 • 1954

உதிர்வு • 06 • 12 • 2020

### ஆறுமுகம்பிள்ளை பாலசுப்பிரமணியம்

யாழ் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கனடா றொறொன்டோவை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம்பிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்கள் 06.12.2020 அன்று ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யாழ்ப்பாணம் நாதஸ்வர வித்துவான் பி.எஸ்.ஆறுமுகம்பிள்ளை - ராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாவிட்டபுரம் நாதஸ்வர வித்துவான் சமூக சேவையாளர் S.R. ஞானசுந்தரம் (J.P)-நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் சீதாதேவியின் அன்புக் கணவரும் (கனடா) ஜெகப்பிரியன் (கனடா),கெஜாயினி (கனடா), தனஞ்செயன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தைப்மன்சூர் (கனடா), டோரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரி.பெட்ராம், ரி.ஸ்ராலின் ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர் திருமதி A.சரஸ்வதி, திருமதி T.புவனேஸ்வரி (இலங்கை), A.முருகதாஸ் (கனடா), A.ஞானபண்டிதன் (கனடா), திருமதி B.கமலாம்பிகை (சுவிஸ்), A.சிவகுமார் (கனடா), அமரர் A.நாகநந்தினி, A.சாமிநாதன் (கனடா), திருமதி M.நீலவாணி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதாதேவி (இலங்கை), குகநாதன் (சுவிஸ்), கலாதேவி (பிரான்ஸ்), இராமநாதன் (இலங்கை),ஜெயாதேவி (இலண்டன்), ஜெகநாதன் (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். மற்றும் பாசமிகு மைத்துனரும் மாமாவும், தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் எதிர்வரும் வியாழக்கிழமை (10.12.2020) கனடாவில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மேலதிகவிபரங்களுக்கு:-**
**சீதாதேவி (மனைவி) :- 647 745 1829**
**பிரியன் ( மகன் ) :- 647 904 8166**
**தெயா ( மகள் ) :- 647 807 1829**
**தனன் ( மகன் ) :- 647 551 5221**
**ஆ.முருகதாஸ்(சகோதரன்):- 416 420 1309**

**தகவல்:**
**ஞானசுந்தரம் குகநாதன்**
**(மைத்துனர் - சுவிஸ்)**

# கடும் பனிக்கு மத்தியில் விவசாயிகள் போராட்டம்

புதுடில்லி, டிசெ. 8



மத்திய அரசு நிறைவேற்றியுள்ள புதிய விவசாய சட்டங்களை மீளப் பெறக் கோரிய விவசாயிகளின் போராட்டம் கடும் குளிரின் மத்தியிலும் தொடர்கிறது.

புதிய சட்டங்கள் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் என மத்திய அரசு கூறியுள்ளது. ஆனால் இந்த சட்டங்களால் குறைந்தபட்ச ஆதரவு விலை, மண்டி அமைப்பு உள்ளிட்டவை அழிந்து, வேளாண்துறை தனியார்வசம் சிக்கிவிடும் என விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். எனவே இந்த சட்டங்களை திரும்பப் பெற அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இந்த கோரிக்கையை வலியுறுத்தி பஞ்சாப், அரியானா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் டில்லியை முற்றுகையிட்டுள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி ஆரம்பமான போராட்டம் இன்று 12ஆவது நாளாகவும் தொடர்கிறது. சுமார் 40 விவசாய அமைப்புகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் டில்லியில் குழுமி உள்ளனர். போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் விவசாயிகளுடன் மத்திய அரசு தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறது. பேச்சுகள் தொடர்ந்து தோல்வியில் முடிந்த நிலையில் 9ஆம் திகதி மீண்டும் இரு தரப்பினரும் சந்தித்து பேசவுள்ளனர். இதேவேளை நாடு முழுவதும் இன்று முழு அடைப்புப் போராட்டமும் நடைபெறவுள்ளது. (வ-இ)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## வழங்குனர்களை பதிவுசெய்தல்- 2021

வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது 2021ம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், வேலைகள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

| தொகுதி A | பொருட்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் |
| A - 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் |
| A - 03 | கணனி, இலத்திரனியல் பொருட்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 04 | திரைச்சிலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள் மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட, இரும்புப்பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் எனைய பொருட்கள் |
| A - 09 | சுத்திகரிப்புப்பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள், |
| A - 11 | எரிபொருட்கள், உராய்வுநீக்கிகள் |
| A - 12 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 13 | கற்கள், மண் வகைகள் |
| A - 14 | தீராந்திகள், பலகைகள் |
| A - 15 | அலங்காரப் பொருட்கள் |
| A - 16 | மருந்துப்பொருட்கள் |
| A-17 | மரக்கன்றுகள் மற்றும் சாடிகள் |

| தொகுதி B | சேவைகள் |
|---|---|
| B- 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 02 | கணனி, பிரதியாக்கல் இயந்திரம், அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B - 03 | காற்றுகுளிராக்கி, மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம், திருத்துதலும், மீளமுறுக்குதலும், |
| B - 04 | அச்சிடுதல், புத்தககங்கள் கட்டுதல் |
| B - 05 | உள்ளக தொலைபேசி இணைப்பும் உள்ளக இணைய இணைப்பும், பராமரிப்பும் |
| B- 06 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B- 07 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B- 08 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B- 09 | ஏற்றியிறக்கும் சேவை (தார், முதலான வீதி மூலப்பொருட்கள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள்) |
| B- 10 | சகலவிதமான வாகனத்திருத்தம் |
| B- 11 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| B- 12 | வாகனங்களுக்குரிய ரீயூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C - 01 | கட்டட நிர்மாணமும், திருத்தமும் |
| C - 02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C - 03 | கிணறு அமைத்தல் |

1. வழங்கல்கள் 2021ம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
3. விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பதிற்கும் எமது தலைமையலுவலகத்தில் பதிவுக் கட்டணம் ரூ. 1000.00 (VAT, NBT நீங்கலாக) செலுத்தி தலைமை அலுவலத்தில் பெற்றுக் கொள்ளலாம்
4. விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் -2021”** எனக்குறிப்பிட்டு **“தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்”** எனும் முகவரிக்கு 22.12.2020ம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

க.தர்சன்
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
0212244045 / 0212240017

# இந்திய விவசாயிகளுக்காக லண்டனிலும் ஆர்ப்பாட்டம்!

லண்டன், டிசெ. 8




இந்திய விவசாயிகளுக்கு ஆதரவாக லண்டனில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்திய மத்திய அரசின் வேளாண் சட்டங்களை திரும்பப் பெறக்கோரி, டில்லியில் கடும் குளிர் நிலவி வரும் நிலையிலும் விவசாயிகள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்திய விவசாயிகளுக்கு ஆதரவாக லண்டனில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

லண்டனில் உள்ள இந்திய தூதரக அலுவலகம் முன் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். 'பஞ்சாப் விவசாயிகளுக்கு நாங்கள் இருக்கிறோம்' என்று கோஷமிட்டவாறு ஆர்ப்பாட்டம் நடந்த நிலையில் லண்டன் பொலிஸார் போராட்டக்காரர்களை கலைத்தனர்.

கொரோனா விதிமுறைகளின் அடிப்படையில் ஓர் இடத்தில் 30க்கும் மேற்பட்டவர்கள் ஒன்று கூட லண்டனில் அனுமதி இல்லை. இந்த நிலையிலேயே போராட்டக்காரர்கள் பொலிஸாரால் கலைக்கப்பட்டுள்ளனர். (ம)

# ஒட்சிசன் பற்றாக்குறை 6 நோயாளர்கள் இறப்பு


இஸ்லாமபாத், டிசெ. 8

பாகிஸ்தானில் அமைந்துள்ள மருத்துவமனையொன்றில் ஒட்சிசன் விநியோகப் பற்றாக்குறை காரணமாக குறைந்தது ஆறு நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்களுள் ஐவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

பாகிஸ்தானின் வடக்கு நகரமான பெஷாவரில் உள்ள அரச மருத்துவமனையொன்றிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. விநியோக நிறுவனத்தின் அலட்சியப்போக்கே இதற்குக் காரணம் என அந்த மருத்துவமனை வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என மாகாண சுகாதார அமைச்சர் தைமூர் சலீம் ஜாக்ரா தெரிவித்துள்ளார். (வ-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு
17 . 02 . 1967



இறப்பு
07 . 12 . 2020

### திரு. முருகேசு சிவகுமார்

நிலாவரை புத்தூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.முருகேசு சிவகுமார் நேற்றைய தினம் (07.12.2020) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு நேசமணி தம்பதியரின் அருமை மகனும், சரஸ்வதி, பாலச்சந்திரன் கணேசலிங்கம், சந்திரவதனி, சந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12. 2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நிலாவரை, புத்தூர்.**

**தகவல் : குடும்பத்தினர்**
**தொடர்பு-மருமகன்**
**0776937918**

# சேவை நலன் பாராட்டு



இலங்கை வங்கியில் 25 வருட கால சேவையை
பூர்த்தி செய்து இன்று (08.12.2020) இல்
ஓய்வுபெறும்

**திரு.கனகரட்ணம் மகேந்திரன்**

அவர்களை அவர் தம் குடும்பத்தினருடன் நீடூழி காலம் வாழ வேண்டுமென இலங்கை வங்கி அச்சுவேலி கிளையும், இலங்கை வங்கி சமூகமும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**முகாமையாளரும் ஊழியர்களும்**
**இலங்கை வங்கி**
**அச்சுவேலி.**


# நீர்வேலியில் நாளை யாகம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

உலக மக்களின் நலன்வேண்டி நடைபெற்றுவரும் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் யாழ்ப்பாணம் நீர்வேலி செல்வக்கதிர்காம சுவாமி திருக்கோவிலில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

கோவில் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் தலைமையில் நாளை காலை இது நடைபெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் 'ஆலய தரிசனம்' நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு இது நேரடி ஒலி பரப்பாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் மகிந்த ராஜபக்சவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நாடு முழுவதும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த யாகம் நடைபெற்று வருகின்றது. (த)


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
**1 சதுர அடி- 45 ரூபாய்**
**077 334 1281**

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு. பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்பு காணி கிணறுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **076 702 3565**


# பச்சிலைப்பள்ளியில் நலநோன்பு உதவிகள்

கிளிநொச்சி, டிசெ. 8

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைப் பகுதியில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நலநோன்பு செயற்பாட்டுக்கு ஒதுக்கப்பட்ட 10 லட்சம் ரூபா பெறுமதியான உதவித் திட்டங்கள் நேற்று வழங்கப்பட்டன.

எதிர்கால சமூகத்தைக் கட்டியெழுப்புதல்' என்ற நோக்குடனும் ஆரோக்கியமான பிறப்பு வீதத்தை மேம்படுத்தும் வகையிலும் சபையின் உப தவிசாளர் முத்துக்குமார் கஜன் இவற்றை வழங்கினார். (த222)


# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மார்க்கண்டு உதயகுமார்**
**(புத்தூர் உபதபால் ஊழியர்)**
**தோற்றம்: 24.12.1956**

**உதயகுமார் வசந்திமாலா**
**தோற்றம்:08.02.1966**

**இறைவன் அடியில் : 08.12.2011**

கண்களில் நீர் பொழிய
கைகள் நடுநடுங்க
இலக்கியம் தடுமாற
இலக்கணம் தமிழ்மாற
எப்படிக் கவிதைகள் எழுதமுடியும்.
உங்கள் புகழ் எப்படிப் பாட முடியும்.

நோயோடு வந்திருந்தால் நொந்திடோமே
வஞ்சகன் மாய்த்துவிட்டுப் போனானோ-என் பெற்றோரே
சாகின்ற வயதா உங்களுக்கு
சாந்தமாய் இருந்த நீங்கள்
சாம்பலாய் போனது ஏன்?

ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எங்கள் இதயத்தில் வாழும் தெய்வங்களே
உங்கள் நினைவோடு தான் தினம் தினம்
வாழ்கின்றோம் நாம்.

உழைப்பிற்கு உதாரணம் என் தந்தை நீரன்றோ
வட மாகாணத்தில் சிறந்த தபால் அலுவலர் நீரல்லோ
விருதுகள் பல பெற்றபோதும் சோரவில்லையே என் ஐயா
தபாற் கடமையுடன் விவசாயமும் உயிரல்லோ
உழைத்துக் களைத்தாலும் சொந்தங்களை நீ மறந்ததில்லை
வேசமற்ற பாசக்காரன் நீரன்றோ

உறவாகி வந்த அந்த வேசக்காரர்கள்
உங்கள் பாசத்தையும் மறந்ததேனோ
இரத்த சொந்தங்கள் மத்தியில்
அர்ப்ப சொத்துக்கள் பெரிதாகி போனதோ
உறவான இரத்தம் சிந்திக்கிடக்கையில் பாசம் பெருகவில்லை
முழுவேசம் தரித்த கயவர்தனை மன்னிப்பது எவ்வழியோ?

அரசன் அன்று கொல்வான்
தெய்வம் நின்று கொல்லும்
உங்களை மாய்த்த அந்தக் கயவர்
இன்று இவ்வுலகில் உயிரோடு இல்லை
அறமென்றும் தோற்றதில்லை என்பதை நாம் அறிவோம்.

ஊர்போற்ற வாழ்ந்த என் அன்பு நெஞ்சங்களே
இன்றும் நீங்கள் எம் நெஞ்சத்திலே நிலையாய் வாழ்கின்றீர்கள்
நினைவுகள் சூழ்ந்து கண்ணீரால் உங்கள் காலடியை நனைக்கின்றோம்
அன்பென்ற பூவெடுத்து உங்களைப் போற்றி நிற்கின்றோம்
சாந்தி அற்று போனனீர் சாந்தியடைய வேண்டுகின்றோம்
உங்கள் ஆன்மா என்றென்றும் இறைதனில் கலக்கட்டும்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நீர்வேலி மேற்கு,**
**4ஆம் மைல்.**
**இராஜ வீதி. நீர்வேலி.**

**பிள்ளைகள்: செந்தூரன் (பிரான்ஸ்)**
**குகதீபன் (கனடா)**
**சங்கீதன் (கனடா)**
**கோபிகா (கனடா)**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட அரச நாடகப் போட்டியில் கிளிநொச்சி **மாவட்டத்தினைச் சேர்ந்த திரு.அ.சத்தியானந்தம் அவர்களின் "மண்குளித்து" எனும் நாடகம் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைப்** பெற்றுக் கொண்டதுடன்

**சிறந்த நெடும் நாடகத் தயாரிப்பு, சிறந்த நாடக இயக்குநர், சிறந்த நெடும் நாடக பிரதியாக்கம், சிறந்த நாடகநடிகர், சிறந்த நாடக கலை வடிவம், சிறந்த நெடும் நாடக இசையமைப்பு, சிறந்த நாடக மேடை முகாமைத்துவம், சிறந்த நாடக மேடை ஒளியமைப்பாளர் போன்ற தேசிய விருதுகளையும்** தனதாக்கிக் கொண்டமைக்காக கடந்த 2020.09.11 ஆந் திகதி கொழும்பு நெளும் பொக்குண கலையரங்கில் இடம்பெற்ற 48ஆவது நாடக விழாவில் கௌரவிக்கப்பட்டுள்ளமையையிட்டு கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவை சார்பாக மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**மாவட்ட பண்பாட்டுப் பேரவை,**
**மாவட்ட செயலகம், கிளிநொச்சி.**

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி**
**வேணுராஜன்-ஆத்மிகா**
**08.12.2020**

Best Wishes

**திரு. திருமதி வேணுராஜன் ரேவதி தம்பதிகளின்**
**அருந்தவப் புதல்வி செல்வி ஆத்மிகா**
தனது முதலாவது பிறந்தநாளை இன்று (08.12.2020)
செவ்வாய்க்கிழமை விமரிசையாகக்
கொண்டாடுகின்றார். இவரை முள்ளியான் மண்டலாய்
பிள்ளையார் துணை கொண்டு பல்கலையும் கற்று,
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**கட்டுக் கொம்பரை,**
**அல்வாய் கிழக்கு, அல்வாய்.**
**021-2265510**

வாழ்த்துவோர்
**அண்ணா-ஜசி**
**மாமிமார், பெரியப்பாமார்**
**பெரியம்மா.**

## புலிகள்...

கொழும்பு, டிசெ.8
போரில் இறந்த சாதாரண மக்களையும், ஆயுதப் போராளிகளையும் நினைவுகூர உரிமை உண்டு. அவர்களின் குடும்பத்தினருக்கு, அந்த உரிமை உண்டு. அதைப்போன்று விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கக் கோர நீதிமன்றம் சென்று வழக்காடவும் உரிமை உண்டு.
இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்றுச் சிங்கள மொழியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்த கருத்துகளுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
"நானும், நாடாளுமன்ற உறுப்பினரும் சரத் பொன்சேகாவும் ஒரே கூட்டணியில் இருக்கின்றோம். ஆகவே, மேலே பார்த்து எச்சில் துப்ப நான் விரும்பவில்லை. சபையில் தரக்குறைவான சொற்பிரயோகம் செய்யவும் விரும்பவில்லை.
இங்கே முன் வரிசையில் உள்ள ஒரு அமைச்சர், சில நாட்களுக்கு முன், என்னை பார்த்து தரக்குறைவாகப் பேசினார். நான் இந்தச் சபையில் தரக்குறைவாகப் பேசவில்லை. சபைக்கு வெளியிலேயே பதில் கூறினேன். அப்படி பேசிய அவர் இன்று சமூகத்துக்குள்ளே குப்பை ஆகிவிட்டார்.
நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா என் பெயர் குறிப்பிட்டு பேசியுள்ள காரணத்தால் நான் இங்கே பதில் கூறவேண்டியுள்ளது. இந்தத் தருணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா சபைக்குள்ளே பிரவேசித்திருப்பது நல்லது. உலகிலேயே தலை சிறந்த இராணுவத் தளபதி என்று சொன்ன வாயாலேயே உம்மைக் கைதுசெய்து இழுத்து வர சொன்னார்கள். அந்தக்காலத்தில் 'புலி' எனக் குற்றஞ்சாட்டப்பட்ட என் கண் முன்னாலேயே, புலிகளைக் கொன்ற உம்மை, ஒரு மிருகத்தைப் போன்று இழுத்துப் போனார்கள். மறந்து விட்டீரா? நான் அரசியலில் பொடியன் இல்லை. நீண்ட வரலாறு எனக்கு உள்ளது. அதை மறந்து விட்டீரா?
2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் உமக்காக நான் பணியாற்றியதை மறந்து விட்டீரா? உமக்காகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணியாற்றியதை மறந்து விட்டீரா? அப்போது மாவீரர் நாள் வடக்கு, கிழக்கில் கடைப்பிடிக்கப் படவில்லையா?
மாவீரர் நாளன்று புரேவி சூறாவளி தமிழ்ப் பிரதேசத்தில் வீசியிருக்க வேண்டும் என்று கூறும் உம்மீது தமிழ் மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் இப்போது கடும் கோபமாக இருக்கின்றார்கள். இது உமக்குத் தெரியுமா?
என்னைப் பொறுத்த வரையில் இந்த நாட்டில் சூறாவளி, சுனாமி, இனவாதம், அடிப்படைவாதம், மதவாதம் எதுவும் கூடாது என நினைக்கின்றேன்.
நான் தமிழன், இந்து என்பவற்றால் பெருமையடைகின்றேன். ஆனால், அவற்றைவிட இலங்கையன் என்பதிலேயே அதிக பெருமையடைகின்றேன்.
நாம் எல்லோரும் அப்படியே சிந்திக்க வேண்டும் எனவும் விரும்புகின்றேன்.
தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீது தடை உண்டு. அவர்களின் பெயரைக் கூறாமல் இருக்கலாம். ஆனால், போரில் இறந்த சாதாரண மக்களையும், ஆயுத போராளிகளையும், நினைவுகூர உரிமை உண்டு. அவர்களது குடும்பத்தோருக்கு அந்த உரிமை உண்டு. இறந்து போன பிள்ளைகளையும், சகோதரர்களையும், கணவர்களையும் நினைவுகூர உரிமை உண்டு.
அதேபோல் விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கச் சொல்லி நீதிமன்றத்துக்கு சென்று வழக்காடவும் உரிமை உண்டு. இது தொடர்பில் சில நாள் முன்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரிடம் சொன்னேன். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடமும் சொல்கின்றேன். நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனிடமும் சொல்கின்றேன். சட்டத்தரணிகளான அவர்கள் செயற்படலாம். என்றார்.
சபையில் இருந்த பீல்ட் மார்ஷல் எம். பி.சரத் பொன்சேகாவை நேரடியாகச் சுட்டிக்காட்டிப் பல விடயங்களை மனோ கணேசன் தனது உரையில் தெரிவித்தார். உரையின்போது பலமுறை எழுந்து மனோவுக்குப் பதில் சொல்ல சரத் பொன்சேகா முயன்றார். (எ-22)

## கொரோனா காவு...

ஆக அதிகரித்துள்ளது.
இதேவேளை, நாட்டில் நேற்று மட்டும் 703 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பேலியகொட மற்றும் சிறைச்சாலை கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கே இவ்வாறு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 25 ஆயிரத்து 25 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 28 ஆயிரத்து 580 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 20 ஆயிரத்து 804 பேர் குணமடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 634 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

## ஒரு லட்சம்...

கடந்த 2ஆம் திகதி முதல் நேற்று வரை 98 வீடுகள் முழுமையாகவும், 3 ஆயிரத்து 414 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.
அடைமழையுடன்கூடிய சீரற்ற கால நிலையால் யாழ் மாவட்டத்தில் 22 ஆயிரத்து 620 குடும்பங்களைச் சேர்ந்த 74 ஆயிரத்து 995 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இருவர் உயிரிழந்துள்ளனர். அறுவர் காயமடைந்துள்ளனர். 93 வீடுகள் முழுமையாகவும், 2 ஆயிரத்து 969 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன. 765 வர்த்தக நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 358 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 340 பேர் 21 பாதுகாப்பு மத்திய நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 227 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 784 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு முழுமையாகவும் 72 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. 464 பேர் 7 பாதுகாப்பு மத்திய நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 926 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 668 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்று வீடுகள் முழுமையாகவும், 276 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 4 வர்த்தக நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 2 பாதுகாப்பு மத்திய நிலையங்களில் 88 குடும்பங்களைச் சேர்ந்த 134 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் 703 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 51 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 40 வீடுகள் பகுதியளவுக்குச் சேதமடைந்துள்ளன. வவுனியா மாவட்டத்தில் 137 குடும்பங்களைச் சேர்ந்த 424 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 57 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (ம-44)

## கொரோனா....

அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று 27/2இன் கீழ் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது
மினுவாங்கொட கொரோனா வைரஸ் கொத்தணியை விசாரித்த கொழும்பு குற்றப் தடுப்புப் பிரிவைச் (சி.சி.டி.) சேர்ந்த 70 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளது. இந்தநிலையில், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவிடமிருந்து நவம்பர் 5ஆம் திகதியே விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் (சி.ஐ.டி.) ஒப்படைக்கப்பட்டன. அது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த சி.ஐ.டி. அதிகாரிகள் 20 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. விசாரணைகள் இன்னும் நிறைவுபெறவில்லை. சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கைகள் இடம்பெற்று விரைவில் விசாரணை நிறைவு செய்யப்படும் - என்றார். (ம-22,44)

## சாவகச்சேரி...

வித்தனர்.
சுன்னாகம் மற்றும் அளவெட்டியைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்களிடம் இருந்து 7 பவுண் நகைகள், 30 ஆயிரம் ரூபா பணம், 2 கிராம் ஹெரோய்ன், 3 மோட்டார் சைக்கிள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.
கடந்த 2ஆம் திகதி புரேவி புயல் காரணமாகக் கடும் மழை பெய்து கொண்டிருந்த சமயம் கல்வயல், மட்டுவில் பகுதிகளில் 7 வீடுகளில் கொள்ளையிடப்பட்டிருந்தது. வயோதிபர்கள் வசிக்கும் வீடுகளை இலக்கு வைத்து ஐந்து பேர் கொண்ட கொள்ளைக் கும்பல் இந்தக் கொள்ளைகளை நடத்தியிருந்தது.
இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் மூன்று முறைபாடுகளே சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தன. வீட்டிலிருந்த வயோதிபர்களை அச்சுறுத்தி, தாலிக்கொடி உட்பட 15 பவுண் நகைகளும், 2 லட்சம் ரூபா பணமும் அன்று கொள்ளையிடப்பட்டன.
இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ், பிரதான பொலிஸ் பரிசோதகரான நிஹால் பிரான்ஸிஸ் தலைமையிலான மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.
விசாரணைகளின் அடிப்படையில் சுன்னாகம் மற்றும் அளவெட்டியைச் சேர்ந்த இருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் பின்னர் பெண் உட்பட 3 பேர் கைதுசெய்யப்பட்டனர்.
சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 7 பவுண் நகைகளும், 30 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்களிடம் இருந்து 2 கிராம் ஹெரோய்னும், கொள்ளைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன என்று சந்தேகிக்கப்படும் 3 மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும், சான்றுப் பொருள்களுடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படுவர் என்று யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-20)

## இத்தாவில்...

இத்தாவிலைச் சேர்ந்த பொன்னையா சிவராசா (வயது-68) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் பாதசாரிக் கடவையில் சைக்கிளில் சென்றபோது, இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது.
இவர் மஞ்சள் கடவை ஊடாக மிதிவண்டியில் வீதியைக் கடந்துள்ளார். அப்போது திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த இ.போ.ச. பஸ் அவரை மோதியுள்ளது. விபத்தை அடுத்து முதியவர் உடனடியாகப் பளை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர் உறுதிப்படுத்தியுள்ளார்.
உயிரிழந்தவரின் உடல் பளை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
அதேவேளை, மருத்துவர் சரியான முறையில் பரிசோதிக்கவில்லை என்று தெரிவித்து சிலர் மருத்துவமனையில் முரண்பட்டனர். அதனால் அங்கு பதற்ற நிலைமை தோன்றியது. பளை பொலிஸார் அங்கு சென்று நிலைமையைக் கட்டுப்படுத்தினர். (எ-6)

## ஐந்து...

யாகியிருந்த நிலையில், அவற்றில் உண்மையில்லை என்று தமிழ்நாடு "வெதர்மேன்" பிரதீப் ஜோன் தெரிவித்துள்ளார்.
இன்றும், எதிர்வரும் 17, 24 ஆம் திகதிகளிலும், அடுத்தாண்டு ஜனவரி முதலாம் திகதி மற்றும் 8ஆம் திகதிகளில் புயல் உருவாகலாம் என்றும் தமிழ்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன என்று நேற்று சமூக ஊடகங்களில் தகவல் பகிரப்பட்டது. அதையடுத்து மக்கள் மத்தியில் அச்ச நிலை தோன்றியிருந்தது. எனினும் அதில் உண்மையில்லை என்று தமிழ்நாடு "வெதர்மேன்" தெரிவித்துள்ளார். (எ-இ)

## மார்ச்....

யை அடுத்த ஆண்டு ஜனவரி 18ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடத்த முடிவு செய்யப்பட்டது. இருப்பினும் கொரோனாத் தொற்று பரவல் காரணமாக நாட்டின் நிலைமையையும் மாணவர்களின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது புதிய திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# காலிக்கு முதல் வெற்றி



லங்கா பிறிமியர் லீக் போட்டியின் நேற்று நடைபெற்ற 14 ஆவது லீக் ஆட்டத்தில் கொழும்பு கிங்ஸ் அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி தொடரில் முதல் வெற்றியை பதிவு செய்தது காலி கிளாடியேட்டர்ஸ்.

ஹம்பாந்தோட்ட சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

சண்டிமல், இவன்ஸ் இணை ஆரம்ப வீரர்களாக களமிறங்கியது. இவன்ஸ் 7 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினாலும் சண்டிமல் ட்ருமன்ட் இணை நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. சண்டிமல்(35) , ட்ருமன்ட் (44) ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்க கொழும்பு கிங்ஸின் மத்திய வரிசையும் சொதப்ப இருபது ஓவர்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் அமீர் 5 இலக்குகளையும் சண்டகன் 3 இலக்குகளையும் தனஞ்சய லக்ஸ்ன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

172 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காலி அணிக்கு ஆரம்பமே அமர்க்களமாக இருந்தது. ஆரம்ப வீரர்களான குணதிலக 38 ஓட்டங்களையும் அக்சன் அலி 56 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தாலும் அடுத்து வந்த பானுக ராஜபக்ச 24 பந்துகளில் 37 ஓட்டங்களையும் அஷாம் கான்

16 பந்துகளில் 35 ஓட்டங்களையும் பெற 17.3 பந்துப்பரிமாற்ற நிறைவில் 2 இலக்குகள் மாத்திரம் இழந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. காலி கிளாடியேட்டர்ஸ். பந்துவீச்சில் அஹமட்,பிரசாத் இணை தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டி யின் ஆட்டநாயகனாக அமீர் தெரிவானார்.

இதேவேளை நேற்றிரவு நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஜப்னா ஸ்டாலியன்ஸ், தம்புள்ள வைக்கிங் அணிகள் மோதின. இப்போட்டி சீரற்ற காலநிலை காரணமாக போட்டி கைவிடப்பட்ட்துடன், இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளிகள் வீதம் பகிரட்டன. (ரி4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்....

### யாழ்ப்பாணம்...

சுகாதார அமைச்சின் தீர்மானத்தின்படி தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கான மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் கடந்த நவம்பர் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்ட பின்னர், கடந்த மாதம் 24ஆம் திகதி கிளிநொச்சிப் பாடசாலைகள் மூடப்பட்டன.

அதன்பின்னர் வடக்கு மாகாணத்தில் கடந்த 2ஆம் திகதி ஏற்பட்ட புரேவி புயல் காரணமாக கடந்த 3ஆம், 4ஆம் திகதிகளில் வடக்கு மாகாணப் பாடசாலைகள் அனைத்துக்கும் விடுமுறை வழங்கப்பட்டது. ஏனைய மாவட்டப் பாடசாலைகள் நேற்று ஆரம்பமானபோதும், புரேவி புயலால் ஏற்பட்ட வெள்ள நிலைமை காரணமாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பாடசாலைகளுக்கு நேற்றும் விடுமுறை வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் கல்வி அதிகாரிகளுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் பாடசாலைகளை இன்று ஆரம்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுப வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

### அரசுக்கு...

கோத்தாபய அரசாங்கத்தின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டித்தும், அடக்குமுறைகளை உடன் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்து.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்று மாலை நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், கறுப்பு பட்டி அணிந்து, கறுப்பு முகக்கவசம் அணிந்துக்கொண்டு தீப்பந்தம் ஏந்தியவாறு பங்கேற்றனர்.

மஹர சிறைச்சாலை மோதல் சம்பவத்தை மையப்படுத்தியும், மக்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை முன்னிலைப்படுத்தியும் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

போராட்டத்தின் முடிவில், ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, "மஹர சிறைச்சாலை தாக்குதல் சம்பவத்தின்போது அரசாங்க பயங்கரவாதமே செயற்பட்டது. இந்தச் சம்பவத்துக்கு யார் பொறுப்புக்கூறவேண்டும் என்பது உட்பட அதனுடன் தொடர்புபட்ட விடயங்களை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்" என்று தெரிவித்தார். (எ-22)

### கிளி. மருத்துவ....

செல்வராசா (வயது-61) ஆகியோரே தத்தம் இடங்களில் சுகவீனம் காரணமாக உயிரிழந்தனர்.

திருவையாறு பகுதியைச் சேர்ந்த மோகனதாஸ் இயலாமை காரணமாக நேற்று முன்தினம் கிளிநொச்சி மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். அவருக்கு கொரோனாத் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அதற்குரிய தனிமைப்படுத்தல் விடுதியில் தங்கவைக்கப்பட்டிருந்தார். எனினும், அன்று இரவு அவர் உயிரிழந்தார்.

இதேவேளை, செல்வராசா நேற்றுமுன்தினம் இரவு நெஞ்சு வலி காரணமாக மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் போதே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இருவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள முடிவுசெய்யப்பட்டது. இரண்டு சடலங்களிலிருந்தும் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருந்தன.

பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின்படி மோகனதாஸுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்பது தெரியவந்தது. அவரது உடல் விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை, செல்வராசாவின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு நேற்றுக் காலை அனுப்பப்பட்டிருந்தன. இந்த நிலையில் மருத்துவமனையின் பிரேத அறையில் மோகனதாஸுக்கு உடற்கூற்றுப் பரிசோதனை செய்வதற்கு பதிலாக செல்வராசாவுக்கு உடற்கூற்றுப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, மோகனதாஸின் உடல் என்று கருதி பிற்பகல் சுமார் 2.30 அளவில் திருவையாறில் உள்ள மோகனதாஸின் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

அங்கு பெட்டி திறந்து வைக்கப்பட்ட நிலையில் மனைவி உட்பட அனைவரும் சோகத்தில் கதறி அழுதுகொண்டிருக்க, 15 வயது மகள் இது தந்தையின் உடல் அல்ல என்றுகூறி கதறியபோதே உடல் மாறி அனுப்பப்பட்ட விடயம் தெரியவந்தது. பின்னர் அந்த உடல் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டது. இதேவேளை, செல்வராசாவுக்கு கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என்பது நேற்றுமாலை பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் இருவருடைய சடலங்களும் அவரவருடைய உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை, உடற்கூற்றுப் பரிசோதனை செய்யமுன்னர் சடலங்களை அவரவர்களின் உறவினர்கள் அடையாளம் காட்டவேண்டும். அதன்படி அடையாளம் காணவிடும்போது, உறவினர்களே சடலத்தை மாறி அடையாளம் காட்டினர் என்று கிளிநொச்சி மருத்துவமனை நிர்வாகம் கூறுகின்றது. (த-214,6)

### தெல்லி....

அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இடமாற்ற அடிப்படையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு வரவேண்டிய உணர்வழியியல் மருத்துவரை, யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் சத்திமூர்த்தியே தடுத்துக் கொண்டிருக்கின்றார் என்று குற்றஞ்சாட்டிய தெல்லிப்பழை மருத்துவர்கள், அதற்கு எதிராகவே இன்று செவ்வாய்க் கிழமை போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என்று அறிவித்துள்ளனர்.

போதனா மருத்துவமனையில் தற்போது பணிபுரியும் உணர்வழியியல் மருத்துவரை தெல்லிப்பழை மருத்துவமனைக்கு பெற்றுத்தரும் எமது கோரிக்கையை, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏற்றுக்கொண்டு அனுமதி வழங்கியுள்ளார். எனினும், அவர் எப்போது விடுவிக்கப்படுவார் என்பது போதனா மருத்துவமனைப் பணிப்பாளரின் கைகளிலேயே தங்கியுள்ளது என்றும் கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றி சத்தியமூர்த்தியிடம் கேட்ட போது, அந்த மருத்துவ நிபுணரை விடுக்க மறுத்துவிட்டார். இந்தநிலையில் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என்று தெரிவித்தனர். (த)

### வலி.கிழக்கு...

வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் முன் பிணை கோரி மல்லாகம் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

வலி.கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வீதியொன்றில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட காட்சிப் பதாகை ஒன்றைத் தவிசாளர் கடந்த வாரம் அகற்றியிருந்தார். வீதி அதிகார சபையின் பெயரில், வீதித் திருத்தம் தொடர்பாக அரசியல்வாதிகளின் படங்களுடன் இந்தப் ப்தாகை அமைக்கப்பட்டிருந்தது.

பதாகை அகற்றப்பட்டமை தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக தவிசாளர் தி.நிரோஷிடம் அச்சுவேலிப் பொலிஸார் இரு தினங்கள் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர்.

நேற்று அவரைக் கைது செய்யும் நோக்குடன் பொலிஸார் பிரதேச சபைக்குச் சென்றிருந்தனர். அங்கு தவிசாளர் இல்லாததால் நீண்ட நேரமாகக் காத்திருந்தனர். அத்தோடு தவிசாளரின் வீடு, அவர் செல்லக்கூடிய இடங்களிலும் பொலிஸார் சென்று தேடினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அவர் பிரதேச சபைக்கு வராத நிலையில், பொலிஸார் திரும்பிச் சென்றனர்.

இந்தநிலையில், முன் பிணை கோரி தவிசாளரால் மல்லாகம் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், நாளை புதன்கிழமை அச்சுவேலி பொலிஸார் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று தெரிவித்து, மனு மீதான விசாரணையை நாளைவரை ஒத்திவைத்தது.

தவிசாளரைக் கைது செய்ய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று தகவல் அறிந்ததும், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அவைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், எஸ்.சுகிர்தன், பா.கஜதீபன் ஆகியோரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்களும் நேற்று வலி.கிழக்கு பிரதேச சபைக்குச் சென்றனர். அங்குள்ள நிலைமைகளை விசாரித்து அறிந்தனர். (எ-20,26)

**சுத்திகரிப்பாளர் தேவை**

யாழ் நகரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சுத்திகரிப்பாளர் தேவை.
தொடர்பு: 071 6 182 182

**துரித பொதிகள் சேவை**

வெளிநாடுகளுக்கு 3-5 நாட்களில் தபால்கள் மற்றும் பொதிகள் அனுப்பிவைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
321, K.K.S. Road, Jaffna. 46, Adiyapatham Road, Thirunelvely.
0777554528, 021 222 7835



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.